# தமிழ் முரசு

முரசு:1 | TAMOUL MOURASSOU | ஒலி:4

"சாதாரண சட்டத்தின் கீழ் விசாரணை செய்



வண. பிதா. சிங்கராயர்
REV. FR. A.SINGARAYAR

1983 மாசி

கொடுதலை! கொடு உயிர்! விடுதலை தமிழ்க்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசின் பார்வையில்

தமிழ் முரசு

**மக்களாட்சியின் இறுதிமூச்சு அடங்கிவிட்டது!**
**சர்வாதிகாரத்தின் உச்சக்கொடி பறக்கிறது!**

ஒற்றைக் குண்டும் வெடிக்காமல்- ஒரு துளிக் குருதி சிந்தாமல் - ஒரு கவிழ்ப்புச் சதி இல்லாமல், இலங்கையில் வல்லதிகார ஆட்சி ஏற்பட்டுவிட்டது! மக்களாட்சியைச் சவப்பெட்டிக்குள் வைத்து, பெட்டியை மூடி, அதன்மேல் கடைசிஆணியும் அடிக்கப்பட்டாயிற்று! ஆம்! சிறிலங்கா பாராளுமன்றத்தின் பதவிக் காலத்தை நீடிக்கக் கோரிய கருத்தெடுப்புத் தேர்தலில் அதிஉத்தமர் செயவர்த்தன வெற்றி பெற்றுள்ளார். இனிமேல் இலங்கையில் என்ன நடக்கப்போகிறது? ஆண்டாண்டுக்காலத்திற்கு அவசரகாலச்சட்டம் நீடிக்கப்படப்போகிறது. பயங்கரவாதத் தடைச்சட்டம் போன்று பல பாதகச் சட்டங்கள் இயற்றப்படப் போகின்றன. ஆக்கிரமிப்புக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் ஈழத் தமிழ் இனத்தின் அல்லல் அதிகரிக்கப் போகிறது. தொழிலாள இனம் தொடர்ந்து நசுக்கப்படப் போகிறது. தேசிய அரசாங்க அமைப்பு என்ற போர்வையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி உட்பட எல்லா எதிர்க்கட்சிகளும் சிதறடிக்கப்படப் போகின்றன. இனி இலங்கையின் எதிர்காலம் என்ன?

நாம் தமிழ் ஈழத்தவர்கள்; சிறிலங்காவின் எதிர்காலத்தைப்பற்றி எங்களுக்குக் கவலையில்லை என்று கூறி எளிதாகத் தப்பிவிடமுடியாது. நம்மை வழிநடத்திய அரசியல் தலைவர்கள் நம்மை மயக்கநிலையில் வைக்கப் பாவித்த மந்திரங்களை நாமும் தொடர்ந்து ஓதிக் கொண்டிருக்க முடியாது. சிறிலங்கா அரசின் ஆக்கிரமிப்பு நிழல் எம்மீது பட்டுக் கொண்டிருக்கும்வரை ... சிறிலங்கா அரசு இயற்றும் பயங்கரவாதச் சட்டங்கள் தமிழரைப் பற்றி நசித்துக்கொண்டிருக்கும் காலம்வரை ... நம் அன்றாட வாழ்க்கை சிறிலங்கா அரசின் ஆளுமையினால் வரையறுக்கப்படும் காலம் முடியும்வரை நாம் சிறிலங்கா அரசை அம்பலப்படுத்த வேண்டியவர்களாகின்றோம்! நாம் தமிழ் ஈழத்தவர்கள் என்று வெறும் மந்திரத்தை சொல்லிக்கொண்டு உயர்மட்டப் பேச்சு போன்ற உல்லாச அரசியல் நாடகங்கள் நடத்தும் காலகட்டத்தை கடந்த காலகட்டம் வந்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிலங்கா அரசுக்கு ... செயவர்த்தனவுக்குக் கிடைத்திருக்கும் இந்த வரம்பு மீறிய அதிகாரம் விரைவில் ஒவ்வொரு தமிழனையும் வீதிக்குக் கொண்டுவர இருக்கிறது. விரைவில் ஆட்சியாளர்களின் அங்கீகாரத்துடன் தமிழ் ஈழம் இன்னும் ஒரு பெய்ரூத்தாக - இன்னொரு எல் சால்வதோராக மாறப் போகிறது. அரசப்படைகள் நிகழ்த்தப்போகும் கொலை, கொள்ளை, கற்பழிப்புக்களிலிருந்து தன்னைப் பாதுகாக்க தமிழினம் தற்பாதுகாப்பு அரண்களை அமைக்க வேண்டிய காலகட்டம் வந்துவிட்டது.

நேற்றைய கதைமட்டும் நாளை தொடரப்போவதில்லை. ஓர் இன்பமும் - ஒரு செல்வமும் மாத்திரம் கொலையடப் போவதில்லை. மொத்தச் சமூகமும் குழிக்குள் அடங்கப் போகிறது. இந்த நிலையைத் தவிர்க்க ஈழத்தமிழினம் என்ன செய்யப் போகிறது. மொத்தமாகத் திரண்டெழுந்து, அரசுக்கெதிராகப் போராடப் போகிறதா? அல்லது அடிமைப்பட்ட இனமாக அடங்கி ஒடுங்கப் போகிறதா?

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தலைவர்கள் எனக் கூறியவர்கள், தமிழ் ஈழத் தேசிய மன்றத்தைக் கூட்டுவோம் என சத்தியம் செய்தவர்கள், தமிழ்மக்களின் தேசியவிடுதலை இயக்கம் நாமேயென வெட்டி முழங்கியவர்கள் எல்லாரும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் செயற்திட்டத்தை இனியாவது சமர்ப்பிக்கப் போகிறார்களா? அல்லது தேசிய அரசாங்கச் சுழலில் சிக்கி அன்றையத் தலைமைகள் செய்த இரண்டகச்செயல்களைவிடப் பலமடங்கு அதிக இரண்டகத்தைச் செய்து இனத்தைஅடியோடொழிக்கப் போகிறார்களா? என்ன நடக்கப் போகிறது அடுத்து ...?

இந்த கட்டத்தில் ஈழத்தமிழ் மக்கள் செய்யவேண்டியது என்ன? அடுத்து வரப்போகும் அத்தனை நெருக்கடிச் சூழலுக்கும் தம்மைத் தயாராக்கவேண்டும். நெருக்கடி என்பது வன்கவர்புப் படையால் மாத்திரம் வரப் போவதில்லை. உணவுப் பஞ்சம் வரும். பொருளாதாரப் பற்றுக்குறை வரும். இவற்றைச் சமாளிக்க அணியமாக வேண்டும். அரசியல் முழக்கங்கள் மட்டும் விடுதலையைத்தந்துவிடாது. உறுதியற்ற தலைமையும் விடுதலையைத் தராது. அதேசமயம் தமிழ்மக்களுக்கு விடுதலையைத்தவிர வேறெதுவும் விடிவைத் தந்து விடாது.

எனவே, இந்த விடுதலையை விரைந்து பெற்றுத்தரும். செயற்திட்டத் தயாரிப்புக்களில் ஈடுபட தமிழீழ இயக்கங்களை தூண்டவேண்டும். இராணுவ அடிப்படையில்இயங்கும் தமிழீழ இளைஞர் இயக்கங்களின் நடவடிக்கைகளை பரவலாக்க - பல்வகைப்பட்ட உதவிகளையும் புரிய வேண்டும். இன்று தமிழ் இனம் ஆற்றவேண்டிய ஆரம்பக்கட்டப்பணி இது. அதைத் தொடர்ந்து ஆற்ற வேண்டியது... சந்திக்க வேண்டியவை பல ...!

* காந்தன் *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதயம் எரிமலையாகிறது

**- வாணு -**

தோழா !

நான் யார்? உனக்குத் தெரியுமா? ! இல்லை; ஆனல் போகப் போகப் புரிந்து கொள்வாய்! முன்னேக்காகச் சில கூறுகிறேன்; கேள். ! நாம் பிறந்த போது புரிந்துபேசியது 'அம்மா' என்ற தமிழ்ச் சொல். அப்படித்தான் என் தாய் கூறினர். வளர்ந்தபோது பேசிய மொழி உலகத்தின் எந்தச் சுவடியிலும் கூறப்படாத ஒரு மொழி. அது பேசப்படும் நாடுகளை உனக்குத் தெரியுமா? நிச்சயம் தெரியும். அதுதான் ஈழம், தமிழ்நாடு, புதுச்சேரி, சிங்கபுரம், மலேசியா ... மற்றும் பல நாடுகள்! அது என்னமொழி? அது தமிழா? என் நண்பர்களும் மற்ருேரும் அப்படித்தான் கூறினர்கள். ஆனல் அதுவோ ஆங்கிலோ-தமிழ்! இது என்ன புதுமொழி என்று நீ கேட்கிருயா? இல்லை; இன்று நீ பேசிய சில வரிகளை எடுத்துப் பார்! அதில் எத்தனை ஆங்கிலச் சொற்களுடன் ஒரு தமிழ்ச் சொல்லைக் கலந்தாய்? ஓ! ஏற்றுக் கொள்கிருயா? ஆமாம்; நீ ஏற்றுக் கொண்ட அதே மொழியைத்தான் எனக்குத் தமிழ்(!) எனப் புகுத்தினர்கள்! இதே மொழியை ("ஆங்கிலோ-தமிழ்") உலக அகராதியில் இல்லாமற்செய்ய, தமிழ் என்று ஒரு மொழியை அழியாமற் செய்ய, செய்யவேண்டுமென்று என்னில் எரிமலையாக வெடித்த உணர்வுகளில் ஒன்று கூறியது!

எப்படிச் செய்வது? எவர் ஏற்றுக் கொள்வார்? பிழைப்பு கெடும் என்பார் சிலர்; அநாகரிகம் - காலத்தோடு ஒட்டாதது என்பார் வேறு சிலர். வயிற்றுக்குத் தரப்படும் முகாமைகூட உன் மொழிக்கு நீ கொடுக்கிருயா? கலப்புத் தமிழை நாகரிகம் என்று கருதுகிருய்? புதியன புகுந்து புதுமைகள் மலர்வதுதான் நாகரிகம் என்ருல், உனது தமிழ் அந்நாகரிகத்தைப் பெற்று என்ருே உயர்நிலையில் உள்ளது. உலகின் பல மொழிகள் அழிந்து போனதற்கு எது காரணம்? அந்த இனமக்கள் வேற்று மொழிக்கு அடிமைப்பட்டு, அந்தக் கவர்ச்சியில் தாய் மொழியைப் புறக்கணித்து வந்ததனல் அன்ருே? இன்று ஆப்பிரிக்காவில்-வியத்நாமில் ... இன்னும் பல நாடுகளில் அவ்வவ்வின மொழிகள் அழிந்தோ, எழுத்து மாற்றம் செய்யப்பட்டு உணர்வு இழந்தோ போய்விட்டது உனக்கே தெரியும். ஆனல் அம்மொழிகள் இலக்கிய, இலக்கண வளம் குன்றியவையாக இருந்திருக்கலாம்; ஆனல் உன் மொழி தமிழ் மற்றவர்க்கு இல்லாத இலக்கிய, இலக்கண வளங்களையும், மூளை வளர்ச்சிக்கு நாளைக்கும் உதவுகின்ற அருங்கருத்துக்களையும் கொண்டுள்ளது என்று அறிஞர்கள் கூறுவது உன் காதுகளில் விழவில்லையா? பேசும்மொழிபற்றி இதுவரை கூறுனேன். மற்றவற்றை பின்னல் கூறுவேன். தாய் மொழியை வளர்ப்போம்; தாயகத்தை மீட்போம்!

உன் அன்புத் தோழன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Spartakist

# Smash Anti-Tamil Terror in Sri Lanka!

FRANKFURT, West Germany— "Smash Anti-Tamil Terror! Free Kuttimani and Jeganathan Now!" chanted a hundred dem- here last month ing th

n.
"d
bloc
Reag.
warde
vention
permane
The L
organized b
joined by a

placards demand Re- lease than amil mil a s- it l

brisk, the first issue of Spartacist, Tamil-language publication of the Spartacist League/Lanka, and *Spartacist* No.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில்
தமிழ் மக்களுக்குத் துணையாக சர்வதேச
தொழிலாளர் இயக்கங்களும் சேர்ந்து
போராடும் காலகட்டம் வந்துவிட்டது!
குட்டிமணி, ஜெகனின் மரண தண்டனை-
யினை இரத்துச் செய்யுமாறும், தமிழ் மக்-
களுக்கெதிரான அடக்குமுறையை
நிறுத்துமாறும் கோரி மேற்கு ஜேர்மனி-
யில் தமிழ் மக்களுடன் சர்வதேச
ஸ்பாட்டசிஸ்ட், சர்வதேச றொஸ்கிய
இயக்கங்கள் போராட்டம் நடத்தும் காட்சி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழக செய்திகள்

∴ **வண. பிதா சிங்கராயர் சாகும்வரை உண்ணாவிரதம்?**

தம்மைச் சித்திரவதை செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றதையும் அதே இரகசியக் காவல் அதிகாரி புண்ணிய. டீசில்வா வேலிக்கடைச் சிறைச்சாலையில் மீண்டும் ஒப்புதல் வாக்குமூலம் பெற முயன்றதையும் விளக்கி சனாதிபதிக்கு ஒரு கடிதத்தை வண. பிதா சிங்கராயர் தாம் சிறையிருக்கும் வேலிக்கடைச்சிறைச்சாலை அதிகாரி வழியாக அனுப்ப முயன்றார். இதற்கு அந்த அதிகாரி மறுத்துவிடவே அதனைக்கண்டிக்கும்வண்ணம் மிகவிரைவில் சிறையில் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக 1.2.83இல் சிங்கராயர் அறிவித்துள்ளார். தம்மீது வழக்கு முன்பே தாக்கல் ஆகியிருந்தும் இரண்டாம் முறையாக அவரைச் சித்திரவதைசெய்து வாக்குமூலம் பெற அவர் இடம் கொடுக்க மறுத்துவிட்டார்.

∴ **தென்னிந்தியாவில் கூட்டு அமைச்சவை!**

தென்னிந்தியாவின் ஐந்து திராவிடஇன மாநிலங்களின் அரசுகள் கூட்டுறவுடன் பொது அமைச்சவை அமைக்கத் தமிழக முதல்வர் கொண்டுவந்த திட்டம் பேரளவில் மற்ற மாநிலத்தவரால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. கேரளாவில் பொதுவுடைமைக்கட்சியினருடனும், புதுவையில் தி.மு.க.வுடனும் கூட்டணி அமைத்து இந்திரா காங்கிரசு ஆட்சியமைத்துள்ள அதே நேரத்தில் கருநாடகத்திலும், ஆந்திராவிலும் தமிழ்நாட்டிலும் மாநிலக்கட்சிகளே இப்போது ஆட்சியைக் கைப்பற்றியிருப்பதைத் தொடர்ந்து தென்னிந்திய ஆட்சியமைக்க முதற்கட்டமாக தென்னிந்தியக் கூட்டு அமைச்சவை ஒன்றை அமைக்க பெருமளவில் ஆதரவு திரண்டுவருகின்றது. இது இந்திராவின் ஆட்சிக்குப் பேரடியாகும்!

∴ **தமிழீழத்தில் வேலைநிறுத்தமும் 100 % பாடசாலைப்புறக்கணிப்பும்**

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கக்கோரியும், அச்சட்டத்தின்கீழ்த் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள மதகுருமாரையும், பல்கலைக்கழக விரிவுரையாளரையும் அவர்தம் மனைவி நிர்மலாவையும், மற்ற இளைஞர்களையும் விடுவிக்கக் கேட்டும் பல்கலைக்கழக மாணவர்களும் தனியார்-அரசுப் பாடசாலை மாணவர்களும் நடத்திய பாடசாலைப் புறக்கணிப்புப் போரர்ட்டமும் வேலைநிறுத்தமும் நூற்றுக்கு நூறு அளவில் வெற்றி பெற்றது. யாழ்ப்பாணத்திலும் சுற்றுவட்டாரங்களிலும் கடைகள் பூட்டப்பட்டிருந்தன. வலுவான காவலர்-படைகள் கூட்டுக் கண்காணிப்பு நடத்தின. திரைக்காட்சிகள் அன்று நடைபெறவில்லை. வீதிகள் வெறிச் சோடியிருந்தன. இ.போ. சேவைகள் மாலை [illegible] நிறுத்தப்பட்டன. இருதமிழ் இளைஞர் சிறைப்பிடிக்கப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

∴ பாப்பரசரிடம் வேண்டுகோள்

தமிழ் ஆயர்களைச் சிறை செய்து தடுப்புக் காவலில் வைத்து, கடுஞ் சித்திரவதைகளுக்குள்ளாக்கிவரும் சிறிலங்கா அரசின் அக்குறும்புகளை நேரடியாகக் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளுமாறு பாப்பரசரிடம் அமெரிக்கத் தமிழீழ விடுதலைப் போராளிகள் விடுத்த கோரிக்கையை தற்போது வத்திக்கான் ஆராய்ந்து வருகிறது. தமிழீழ விடுதலைப் பேரவை - பிரான்சும் பாப்பரசரின் கவனத்துக்கு இதனைக் கொண்டுவரும் பெருமுயற்சியில் ஈடுபட்டுள்ளது.

∴ சை.சி.நூ.ப.கழகத் தலைவர் வ. சுப்பையா மறைவு

இந்திய அரசால் 'தாமரைத்திரு' (பதுமச்சிரி) பட்டம்தரப்பட்டுச் சிறப்பிக்கப் பெற்றவரும், இதுவரை 1,750 புத்தகங்களை தமிழ் இலக்கிய, இலக்கண முன்னேற்றத்திற்கு வெளியிட்டுத் தொண்டுபுரிந்தவருமான பதிப்பாசிரியர் வ. சுப்பையா அவர்கள் தம் 86ஆம் அகவையில் மறைந்தார். தமிழக அரசு இவருக்குச் 'செந்தமிழ்ச் செல்வர்' என்று பட்டமளித்துச் சிறப்புப் பெற்றது.

∴ வவுனியா ஐ.தே.க. அமைப்பாளர் சுட்டுக் கொலை

வவுனியா மாவட்ட ஐ.தே.க.அமைப்பாளர் ஆயுதந் தாங்கிய இளைஞர்களால் அவரது வீட்டில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார். இது ஐ.தே.க. வட்டாரங்களில் பெருங்கிலியை ஏற்படுத்தியுள்ளது. இதற்குமுன் பல ஐ.தே.க. அமைப்பாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டது தெரிந்ததே!

∴ தமிழ்நாட்டில் இலங்கை-மலையகத் தமிழர் உரிமைக் காப்புமாநாடு

சிறி லங்காவில் வாழும் இந்திய இனத்தவரை - அந்தந்த நாட்டின் தேசியச் சிறுபான்மையினருக்கான அனைத்து உரிமைகளுக்கும் தகுதி படைத்த அவர்களை, அகதிகளாக்கி வெளியேஅடித்துத்துரத்த வகை இலால்பகதூர்-பண்டாரநாயக்கா ஒப்பந்தத்தை அடியோடு கைவிடக் கோரியும், அதுபோன்ற புதியதொரு ஒப்பந்தத்தை இனியும் எந்த வெளிநாட்டுடனும் செய்துகொள்ளாமலிருக்க வற்புறுத்தியும், ஏற்கனவே தமிழகத்தில் அல்லற்படும் தமிழ் அகதிகளின் அவலநிலையை அகற்றக் கோரியும் பிப்ரவரி 19-20 நாட்களில் சென்னை பெரியார் திடலில் தமிழீழத் தோழமைக்கழகம் சார்பில் கூட்டப்படும் இம்மாநாட்டில் தமிழகத்தின் அனைத்துக்கட்சிகளையும் சேர்ந்த முக்கியத்தலைவர்களும் பேரறிஞர்களும் கலந்து கொள்ளுகின்றனர்.

∴ 'தென்மொழி' - 'தமிழ்ச்சிட்டு' நிறுத்தப்படும் ?!?

தமிழ் இன விடுதலைக் குரலாக உலகத் தமிழின முன்னேற்றக்கழகத்தால் பதிப்பிக்கப்பெறும் 'தமிழ்நிலம்' ஒன்றையே இனி வளர்த்து வரப் போவதாகவும் அதனால் முழுநேரத்தையும் விடுதலைப்பணிக்கு ஒப்படைக்க வகைசெய்யும்வண்ணம் 'தென்மொழி' - 'தமிழ்ச்சிட்டு' ஆகியவற்றை இனி நிறுத்திவிடப் போவதாகவும் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அறிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

∴ மாணவிகளும்_அருட்செல்விகளும்_தொடர்_உண்ணுநோன்பு!

யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பித்த தொடர் உண்ணுநோன்பு 50பேர் கொண்ட மாணவர் அணிகளாக நான்கு நான்கு நாட்களாக மாறி மாறித் தொடர்ந்த உண்ணாவிரதப் போராட்டமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 1.2.83இல் ஆரம்பிக்கப்பட்ட உண்ணாவிரதம் தொகுதிவாரியாகப் பரவலாக்கப்பட்டு வருகிறது. இதில் மாணவ மாணவியருடன் அருட்செல்விகளும் கலந்து கொள்வது குறிப்பிடத்தக்கது.

∴ நியூயார்க்கு_தமிழீழ_விடுதலைப்_பேரவையின்_3ஆம்_இசைத்தட்டு

நியூயார்க்கு தமிழீழ விடுதலைப் பேரவை நடத்திய பாரதி நூற்றுண்டு விழாவில் தமிழீழத்தின் கதை பகுதி 3 இசைத்தட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்டவர் நடிகை பத்மினி ஆவார். மேலும் குட்டிமணி—செகனுக்கு வீரப்பட்டயங்களும் அளிக்கப்பட்டன. தமிழர் நிலையம் ஒன்றை நியூயார்க்கில் அமைப்பதென்றும் அதில் தமிழர் கலை, நாகரிக, பண்பாட்டுச்சின்னங்களை நிறுவுவதென்றும், அத்துடன் தமிழ் நூலகம் ஒன்றை உருவாக்குவதென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

∴ கருநாடக_மாநிலத்_தொகுதியில்_அண்ணா_தி.மு.க._வெற்றி!

அண்மையில் கருநாடக மாநிலத்தில் நடந்த தேர்தலில் மேற்படி மாநிலத்தைச் சேர்ந்த கோலார் தங்கவயல் தொகுதியில் அண்ணா தி.மு.க. வேட்பாளர் பக்தவத்சலம் அவருக்கெதிராகப்போட்டியிட்ட இ.காங்கிரசு ஆதரவுக் குடியரசுக்கட்சி வேட்பாளரைத் தோற்கடித்து வெற்றிபெற்றுள்ளார். கருநாடகத்தில் ஒரேயொரு அண்ணா தி.மு.க. வேட்பாளர் மட்டுமே போட்டியிட்டு முதல்முறையாக வெற்றியும் பெற்றுள்ளது குறிப்பிடத்தகுந்தது.

∴ தமிழர்_உரிமைக்_காப்பு_மாநாடு_வெற்றிபெற_த.வி.பே.(பி) வாழ்த்து

சென்னையில் தமிழீழத் தோழமைக் கழகத்தால் நடத்தப்படும் தமிழர் உரிமைக் காப்பு மாநாட்டுக்கு தமிழீழ விடுதலைப் பேரவை — பிரான்சு தம் முழு ஆதரவை வழங்கி வாழ்த்துவதுடன் மாநாட்டு ஒழுங்குகட்கு சிறு உதவியாக 1,000 பிராங்குகளையும் வழங்கியுள்ளது.

∴ பேரா._கைலாசபதி_மறைவுக்கு_நாடெங்கணும்_அஞ்சலி

பேரா. கைலாசபதியின் மறைவுகுறித்து நாடெங்கிலும் உள்ள இலக்கியச் சங்கங்கள் தொடர்ச்சியாக அஞ்சலிக் கூட்டங்களை நடத்தி அன்னார் தமிழுலகுக்கு ஆற்றிய பெரும்பணிகளை நினைவுகூர்ந்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

∴ "மதகுருமாரைக் கொடுமைப்படுத்தாதே!" சர்வகட்சிகண்டனம்!

இலங்கை அரசு தமிழ்க் கிறித்தவப் பாதிரிமார்களைச் சிறைசெய்து கொடுமைப்படுத்துவதை வன்மையாகக் கண்டித்து சென்னையில் சர்வகட்சிக் கூட்டம் 14.12.82இல் நடத்தப்பட்டது. இதில் தமிழ்நாடு காமராசு காங்கிரசு, கிறித்தவ சனநாயகக் கட்சி, இலங்கை குடிபெயர்ந்தோர் நலஉரிமைச் சங்கம், விவசாயிகள்-தொழிலாளர்கள் கட்சி, தமிழீழத் தோழமைக்கழகம், வலது பொதுவுடைமைக்கட்சி, அண்ணா தி.மு.க., உட்பட சர்வகட்சியினரும் மாபெரும் இரு பொதுக்கூட்டங்களை நடத்திக் கண்டித்துள்ளனர்.

∴ குட்டிமணி விரைவில் பதவி விலகுவார்!

வட்டுக்கோட்டைத் தொகுதியின் பா.உ.வாக கூட்டணியினரால் அமர்த்தப்பட்ட தமிழீழ விடுதலைப் போராளியும் தூக்குத்தண்டனை யளிக்கப்பட்டு அதனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்படவுள்ளவருமான குட்டிமணி விரைவில் பதவி விலகுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனை கூட்டணிச் செயலதிபர் கூறியுள்ளார். அந்த இடத்திற்கு அரசு-கூட்டணி ஒப்பந்தத்தின் அடிப்படையில் டாக்டர் நீலம் திருச்செல்வம் அமர்த்தப்படுவார் என நம்பப்படுகிறது. கூட்டணி ஏற்கும் என எதிர்பார்க்கப்படும் ஐந்து மாவட்டமந்திரிப்பதவிகளில் ஒன்று இவருக்கு அளிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

∴ மாணவர் கைவினைக் காட்சியில் கேரளாவுக்கு வெற்றி

சென்னையில் நடைபெற்ற தென்னிந்திய மாணவர் கைவினை-தொழில்நுட்பப் பொருட்காட்சியில் பங்கு பெற்ற தென் மாநிலங்களின் 254 பள்ளி, கல்லூரி மாணவர் பங்கேற்றனர். சிறந்த தொழில் நுட்பங் காட்டிய திருவனந்தபுரத்தைச் சேர்ந்த மாணவருக்குச் சிறப்புப் பரிசு தரப்பட்டது. தென் திராவிட இன மாணவர்க்கான இதுபோன்ற கூட்டு நிகழ்ச்சிகள் தென்னிந்தியரின் ஒற்றுமைக்கு வழிகோலுவதாக அமைந்துள்ளது.

∴ யாழ். நூலகத்திற்கு தமிழ்நாடு 10000 நூற்கள் நன்கொடை

மேற்படி செய்தியை சென்னை இராசாசி மண்டபத்தில் நடந்த இலங்கைப் பயங்கரவாதச் சட்ட எதிர்ப்புக் கூட்டத்தில் தமிழக சட்டமன்ற அவைத்தலைவர் க. இராசாராம் தமிழக அரசின் சார்பில் தெரிவித்தார்.

∴ திருமலை-யாழ் பேருந்தில் சிங்களக் கொள்ளையர் அட்டூழியம்!

திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த இ.போ.ச. பேருந்திலிருந்த தமிழ்ப்பயணிகளிடம் இருந்த 2 இலட்சம் பெறுமான பணம் நகைகள் சிங்களக் கொள்ளையரால் கொள்ளையடிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

∴ 'சுதந்திரன்' இதழ் 2ஆம் தடைக்குப்பின் 3ஆம்முறையாகவெளியீடு!

சிங்கள அரசினால் இரண்டாம் முறையாக -கருத்தெடுப்புத் தேர்தலுக்குப்பின்-சிங்கள அரசுக்குப் பேரிடியாகச் செயற்பட்டு வந்த-தமிழீழ விடுதலை அணியின் போர் முரசான- 'சுதந்திரன்' இதழ் தடைசெய்யப்பட்டது தெரிந்ததே! கனல்கக்கும் தமிழ் உரிமைக் குரலான 'சுதந்திரன்' மீண்டும் புரட்சிப்புயலாக வெளிவந்துள்ளது.

∴ கோவை மகேசனுடன் சர்வதேச சட்டஅறிஞர் குழு சந்திப்பு!

யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்த சர்வதேச சட்ட அறிஞர் குழுவின் பிரதிநிதியான அமி யங் ஆனவதி அவர்கள் 30.1.83இல் சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசனுடன் பேசினார். இலங்கையில் பத்திரிக்கை சுதந்திரம், சுதந்திரன் மூன்றுமாதக்காலமாகத் தடைசெய்யப்பட்டமை ஆகியவைபற்றி கேட்டறிந்து கொண்டார். தடைக்குப் பின் சுதந்திரன் ஆசிரியரைச் சிறைசெய்யக் காவல்துறை தேடித்திரிவதாகச் செய்தியறிந்தவுடன் அதற்குக் கண்டனம் தெரிவித்து காரசாரமான தந்தியொன்றை வாசிங்டனிலிருந்து மேற்படி சட்டநிபுணர்குழு அனுப்பிவைத்தது குறிப்பிடத்தக்கது.

∴ யாழ். எம்.பி., மேயர் மீண்டும் விசாரணை

தமிழீழ விடுதலை, ஆயுதப் போரராட்டங்கள், தொடர்பாக யாழ். பா.உ. யோகேசுவரன், யாழ் நகரத்தந்தை இராசா விசுவநாதன் ஆகியோர் மீண்டும் விசாரணைக்கு உட்படுத்தப்படுவர் என பிரிகேடியர் சிறில் இரணதுங்க தெரிவித்துள்ளார். அப்பாவி இளைஞர்களைத் துன்புறுத்திய இராணுவம் இப்போது தமிழ்மக்களின் முக்கியத் தலைவர்களை நோக்கிப் பாய்ந்துள்ளது. இராசா விசுவநாதன் ஏற்கனவே இருதடவை விசாரணைக்குள்ளானதுதெரிந்ததே! மேலும் பல முக்கியத் தலைவரும் விசாரணைக்குள்ளாவார்கள் என்று மேற்படி இராணுவ அதிகாரி கூறியுள்ளார்.

∴ சனாதிபதிக்கு கூட்டணி சம்பந்தன் வரவேற்பு

தியாகி நடராசனின் வீரத்திருநிலமாம் திருகோணமலைக்கு 31.1.83 அன்று சனாதிபதி செயவர்தன வரும்போது அவருக்கு கூட்டணி பா.உ. இரா. சம்பந்தன் வரவேற்பு அளிப்பார். கூட்டணிக்கட்டுப்பாட்டிலுள்ள திருகோணமலைநகரமன்றம் சனாதிபதி, கருத்தெடுப்புத் தேர்தல்களில் சனாதிபதி பெற்ற வெற்றிக்குப் பாராட்டுத் தீர்மானங்கள் நிறைவேற்றியிருப்பது கவனிக்கத்தக்கது.

∴ நெல்லியடியில் துப்பாக்கி முனையில் பருத்தித்துறை நீதிபதி இராணுவத்தால் மிரட்டப்பட்டார்.

∴ யாழ்.நகரில் மாணவர் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் 25,000பேர் கலந்துகொண்டனர். இரு பேருந்துகள்எரிக்கப்பட்டன.

∴ மலையகத்தில் இருதமிழரைச் சுட்டுக் கொன்றச் சிங்களக்காவலன் அடித்துக்கொல்லப்பட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இன விடுதலை

## 7. தமிழர் ஏக்கமும் தூக்கமும்!

"தூங்கும் புலியைப் பறை கொண்டு எழுப்பினோம்; தூயதமிழரைத் தமிழ் கொண்டு எழுப்பினோம்!" என்று மறப்பள்ளி எழுச்சி பாடினர் புரட்சிப்பாவேந்தர்! தமிழனின் தூக்கம் கலைந்தபாடில்லை. தந்தை பெரியாரும் அறிஞர் அண்ணாவும் அவர்களின் திராவிட இயக்கங்களும் கரடியாகக் கத்தி, தமிழின உணர்ச்சியைத்தூவ முற்பட்டனர். அவர்களின் அணுகுமுறையில் சீர்திருத்த நெடி இருந்த அளவுக்கு – அரசியலும், தேர்தலும், பதவியும் பட்டங்களும் அவர்களை அலைக்கழித்த அளவுக்கு – தமிழ்மொழித் தூய்மையும், தமிழின மரபும் இல்லாமையால் அவர்களுக்கு அரசியற்பதவிகள் பரிசாகக் கிடைத்தபோதிலும் அவர்களால் தமிழின ஒற்றுமையைஉருவாக்கிட உண்மையில் உதவ முடியவில்லை. தமிழ்நாட்டிலும், இந்தியாவிலும் அவ்வப்போது எழுந்த பல்வேறு அரசியல், மொழி, பொருளியல் சிக்கல்களுக்கேற்ப, இடம் மாறியும், தடம் புரண்டும், திசை திரும்பியும், விசை குறைந்தும் போய்விட்டன திராவிடர் இயக்கங்கள். 'தமிழினம்' என்று கூறிக்கொள்ளவும் விரும்பாமல் ஆரியர் தமிழரை அழைத்த இடுகுறிப் பெயரான "திராவிடம்" என்ற சொல்லால் அழைத்துக் கொண்ட அவர்களின் போக்கால் தமிழர் ஒற்றுமை எப்படித் தழைக்க முடியும்? போதாக்குறைக்குப் பேராயக்கட்சி (காங்கிரசு) தலைவர்களாகப் பச்சைத்தமிழர்களான காமராசர், சுப்பிரமணியம், பக்தவத்சலம், அளகேசன், பூவராகன்போன்றோர் இருந்தபோதிலும், தில்லி அரசுக்குக் 'கால்கழுவி' விடுவதிலும், இந்தி மொழிக்குக் 'காவடிதூக்கி' வருவதிலும், ஆரியப்புரட்டுக்கு 'ஆலவட்டம் சுற்றுவதிலும்' தங்கள் பொன்னான பொழுதைப் போக்கி தமிழின உணர்வுக்கு 'ஆப்பு வைத்து' வந்தனரேயன்றி, எள்ளளவும் இன ஒற்றுமைக்கு உதவவில்லை. இந்தநிலை அன்றுபோல் இன்றும் கலைஞர், புரட்சியார் ஆட்சிகளிலும் அணுவளவும் குறையாமல் இருந்து வருவதையும் நாம் அறிவோம். பிரிவினைத் தடைச்சட்டத்திற்கு அஞ்சி திராவிடநாடு விடுதலைக் கோரிக்கையைக் கைவிட்டுவிட்டு, 'மாநிலத்தன்னாட்சிக்குத் தாவிய' திராவிட இயக்கங்கள், இப்போது நடந்து முடிந்த ஆந்திர–கருநாடகத் தேர்தல் தோல்விகளால் சீற்றமடைந்துள்ள இந்திராவால் தன்னாட்சி கேட்டால் தண்டனைஎன்று சட்டம் செய்யப்பட்டால் தன்னாட்சிக்கொள்கையையும் விட்டுவிடுவரோ?

உருவவணக்கம் உள்ள தமிழ்நாட்டில் கடவுளர் சிலைகளைச் "சூரைத் தேங்காய்" ஆக்குவதிலும், அஃறிணை ஆட்டுக்குப் பகுத்தறிவால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பத்திரகாளி"யைப் 'பலி' கொடுப்பதிலும், அருவருப்பில் புழுத்த ஆரியக்கடவுளரின் பழங்கதைகளைத் தமிழர் எங்கே மறந்துவிடப் போகிறார்களோ என்று பார்ப்பனரைவிட வேகமாக, பகுத்தறிவுச் சொற்பொழிவுகளில் அக்கதைகளை அப்பட்டமாகக் கூறி, மக்களை மேன்மேலும் அதே சிறுகிறுப்பிலும் கிளுகிளுப்பிலும் வைத்திருக்கவே விரும்பும் தன்மானத் தலைவர்களால் எப்படித் தமிழின ஒற்றுமைபற்றிக் கவலைப்பட முடியும்? "விடுதலை" என்ற நாளிதழை நடத்துவோர் தமிழின விடுதலைக்கு வழிகாட்டுவதாகப் பாசாங்கு செய்து வருவதைத் தவிர, தொடர்ந்த போராட்டங்களில் ஈடுபடுகின்றனரா? இல்லையே! அவர்கள் நடத்தும் போராட்டங்களால் 'சாதி' ஒழிந்த காலம்போய், 'பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்', 'தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் பங்குபெறப் போட்டியிடும் புதிய குலத்தார்' என்றெல்லாம் புதியபுதிய 'சாதி'கள் தலைதூக்கி வருவதையே இப்போது கண்டுவருகின்றோம்!

பெரியாரால் 'சன்னிதானம்' என்று சமற்கிருத அடைமொழி தந்து அழைக்கப்பட்டு வந்தவரும், முற்போக்காளர் என்று பலதமிழரால் கருதப்படுபவருமான குன்றக்குடி அடிகளார் "தமிழ்நிலம்" கிழமையிதழில் அண்மையில் திருவாய்மலர்ந்தருளியிருக்கும் கருத்தொன்றைக் கவனிப்பார்க்கு அவரது "முற்போக்கின் முத்திரை" பளிச்செனப் புலப்படும். "தமிழீழம் பெறுவது நடக்காது – அது தேவையும் இல்லை" என்னும் அடிகளாரின் 'தமிழ் நோக்கும்' அவர் கருத்தின்படியான 'தமிழர்போக்கும்' ஊன்றிக் கவனித்தற்குரியது. "தமிழைவிட தமிழர்கள் வாழ்வைப் பற்றித்தான் நான் நினைக்கிறேன்" என்ற கொள்கையுடையவராகத் தம்மைக் கூறிக்கொள்ளுகிறார் அடிகளார்.

"சிங்களவர் புதிய குடியிருப்புக்களை உருவாக்கியபோது தமிழர்களும் புதிய குடியிருப்புக்களை உருவாக்கியிருக்கலாம்; அரசும் அதற்கு ஆக்கம் அளித்தது; ஆனால் தமிழர்கள் அதை உணரவில்லை" ... "தமிழர்கள் வாழும் சூழலுக்கு ஏற்பத் தங்களை ஒன்றிணைத்துக்கொள்ளவேண்டும்!" ... "தமிழீழம் பெறுவது தமிழ்ர்கள் பிரிவுணர்ச்சியால் நடக்காது என்றே கூறலாம்; அது தேவையும் இல்லை. ஒன்றிணைத்துத் தங்களை வளர்த்துக்கொள்ளுதலே சாலச் சிறந்தது" என்று பலவாறு கருத்து அளந்துள்ளார்! இலங்கையில் மலையகத் தமிழர் காடுகளை அழித்து கழனிகளாக்கிப் புதிய குடியிருப்புக்களை உருவாக்கியபோது சிங்களப் பட்டாளம் தீயிட்டும், சூறையாடியும் அவர்களை விரட்டியடித்தது அனைவருக்கும் தெரிந்த ஒன்று. இவர் சொல்கிறார் புதிய குடியிருப்புக்களை உருவாக்க சிங்கள அரசு ஆக்கம் அளித்தது என்று! தம்தம் தேசிய, இன, மொழித் தனித்தன்மையைக் கட்டிக்காக்காமற்போனால் சிங்களவரால் இலங்கையில் தமிழருக்குஇன்னல் நேராது என்று கூறுகின்றார் குன்றக்குடியார்! உரிமைகள் மலிந்துள்ள மலையா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் தமிழர்கள் தங்கள் தனித்தன்மையை இழக்காமல் சேர்ந்து வாழ அரசு உரிமை தந்திருக்கும்போதே இனக்கிளர்ச்சிகளும் போட்டிகளும் நாளுக்குநாள் அங்கே வலுத்துவருவதை அடிகளார் அறிந்தும் அறியாதவரைப்போல இப்படிக் கூறியிருப்பது எத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊனக் காட்டுகின்றது? "தமிழ்நாட்டுத் தமிழர்களாகிய நாங்கள் கையாலாகாதவர்கள். இலங்கையில் சிங்களவர் வந்தேறிகள் அல்லர் தமிழர்கள்தாம் பிழைக்கச் சென்றூர்கள் அங்கே! மலேயா, சிங்கப்பூர் போல வந்தேறிகளான தமிழ்மக்கள் அந்நாட்டுமக்களாகிய சிங்களவருடன் ஒன்றிணைந்து (உரிமை கேளாமல்) கொள்ளுதலே தமிழர் வாழ்வுபெறச் சிறந்தவழி. அவர்கள் தமிழீழம் பெறுவது நடக்காது; இப்படி ஒன்றிணைந்தால் போதும்; பிரிவினை தேவையில்லை" என்பது தானே அவர் சுற்றிவளைத்து நீட்டிமுழக்கி உரைக்கும் முற்போக்கு அறிவுரை! ஒன்றிணைந்து அவர் கூறுவதுபோல வாழ முற்பட்ட தமிழர்கள் மொரீசியசு, மதகாசுக்கர், குவாட்லூப்பு போன்ற நாடுகளில் தமிழைமறந்து அங்குள்ளஇந்திமக்களுடன்கூடி இந்தியேபேசுகின் — றுதைப் போல வாழச் சொல்கின்றூர் குடியார்! முற்போக்காளர் என்னப்படும் குடியாரே இப்படி என்றூல் 'சோ' போன்ற பார்ப்பனரால் தொழப்படும் காஞ்சி மடத்தடியார் போல்வார் என்ன சொல்ல மாட்டார்கள்? 'வீரமணி'யின் காரம் குறைந்ததற்கு 'துக்ளக்' இதழில் எழுதிவரும் 'செபமணி'யின் கிண்டற்கட்டுரையே சான்று அன்றோ? எவ்வளவு துணிவிருந்தால் தமிழின உணர்வைக் கிண்டல் செய்து அக்கட்டுரையை எழுதுவார் செபமணி! அவருக்கு இளக்காரமாக ஆனபின்னூல் அதே துக்ளக்கில் நேர்வு கொடுக்கிறூர் வீரமணி! தமிழ்மக்களின் சமய உணர்ச்சியை வளர்க்க உதவவேண்டிய குன்றக்குடியாரே இப்படி ஒருபடி இறங்கி கருத்து அளப்பதால், பார்ப்பன ஆரிய வெறியாட்டம் தமிழர்களை மட்டந்தட்டுவதற்கு இனி கேட்கவும் வேண்டுமா? இவர்களால் எப்படி தமிழின விடுதலை முழக்கம் இனி எழுப்ப முடியும்?

இங்கிருந்துகொண்டே உலகளந்து பழக்கப்பட்ட நம் வம்புமடத்தம்பிரான்கள் இலங்கையில் தமிழீழத்தில் தொடர்ந்து நிகழ்ந்துவரும் போராட்டங்களின் அடிப்படையையும், அளவையும், அது வளர்ந்துவரும் வேகத்தையும், அதனுல் 'தமிழீழம்' தமிழர்களுக்குக் கிடைக்கப் போகும் வாய்ப்பையும் எப்படி அறிவர்? விடுதலைக்கு ஊக்கமும் ஊட்டமும் தரவேண்டிய தாய்த்தமிழ்நாட்டு மண்ணில் உள்ள அரசியற்காரரும், மதத்தலைவரும், சீர்திருத்தவாணரும், புரட்சியாளரும் தமிழர்களுக்குள் மனச் சோர்வையுண்டுபண்ணுவதிலும், பதவிப்பேராசையால் தாமுங் குழம்பி மக்களையும் குழப்பித்திரிவதிலும், தாழ்வுமனப்பான்மை தமிழனைவிட்டுஅகலாமல் பார்த்துக்கொள்ளுவதிலுமே இன்னும் கருத்துமாக இருந்துவருகின்றனர். தமிழீழ விடுதலைக்குப்போராடும் வேகத்தைத் தமிழர் பெறுவதற்கு இன்றுள்ள அரசியற் போலிகளும், எழுத்தாளக் கூலிகளும், சாதி–சமய வேலிகளுமே போதுமான முட்டுக்கட்டைகளாம்! உண்மைத்தமிழர்கள் — விடுதலை மறவர்கள் — புரட்சி வீரர்கள் சரியான தலைமையில்லாமல் — வழிகாட்டிட தக்க ஆளும், வழிநடந்திட முறையான படையும் இல்லாமல் காட்டிலும் மேட்டிலும் இரவு–பகல் ஒளிந்து திரிந்து, ஏட்டிலும் எழுத்திலும் வடிக்கவியலாத சொல்லொண்ணுப் பெருந்துன்பங்களை விடுதலை எண்ணத்தால் ஏற்று வாழ்ந்துவருவதனை எல்லாத்தமிழர்களும் புரிந்து கொள்ளுவது எப்போதோ?

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஈழ விடுதலை இயக்கம்

# Thamil Eelam Liberation Organization

TELO

## வெளியிட்டுள்ள பிரசுரத்தின் சில பகுதிகள்...

எமது விடுதலை இயக்கத்தின் போராளிகளை சித்திரவதை, கொலைப் பயமுறுத்தல் என எவ்வாறு ஒடுக்கினலும் எமது போராட்டம் ஓயாது என்பதை திட்டவட்டமாக அறிவிக்கும் அதே வேளையில் எமது போராட்டம் எவ்வாறு தோற்றம் பெற்று இப்பொழுது அமையப்பெறும் வடிவத்தையும் சுருக்கமாக இங்கு தருகின்றோம்.

இலங்கையில் தமிழ்த் தேசிய இனமானது தனிநாடு கேட்குமளவிற்கு ஒடுக்கு முறையை அடைந்த பொழுது, தமிழீழத்தில் பல இளைஞர்கள் போராட்டத்தில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டனர்.

* காலம் காலமாக நடாத்தி வரப்பட்ட காந்தி வழிப் போராட்டங்கள் அரசின் கொடூரமான வன்முறை நடவடிக்கைகளால் முறியடிக்கப்பட்டதும்.

* தமிழ் தலைவர்களின் சமரச, ஒப்பந்தங்கள் (இவை தேர்தலையும், அதிகார பங்கீட்டையும் மையமாக வைத்து இரு பகுதிகளாலும் செய்யப்பட்டவை) அமுல் நடாத்த முடியாமல் போனதும்,

* ஆயுதபாணியாயல்லாத அப்பாவி மக்களை ஆயுதபாணியாய் அமையப் பெற்ற காவல்துறையும், படைத்துறையும் இனக்கலவரம் என்ற பெயரில் படுகொலை செய்ததும்.

போராட்டத்தில் குதித்த எமது தோழர்களை காந்திவழிப் போராட்டத்தில் இருந்து கையில் ஆயுதம் ஏந்திப் போராடும் புரட்சிகர சித்தாந்தத்தை ஏற்றுக் கொள்ளும்படி செய்தது. எமது இயக்கத்தின் வளர்ச்சியையும், தொடர்ச்சியையும் கண்டு, சமீப காலங்களில் வன்முறை விடுதலையை பெற்றுத்தராது என்றும், 'சட்டரீதியான' அணுகுமுறைகளே தமிழ் மக்களின் விடுதலையைப் பெற்றுத்தரும் என்றும் தமிழ் மக்களையும், அவர்களின் போராடும் ஆற்றலையும் திசை திருப்ப சிலர் செயல்பட்டு வருகின்றனர். ஆளும் கும்பலானது எப்பொழுதும்.

தனது

1. **பாதுகாப்பிற்கும்**
2. **நலத்திற்கும்**
3. **விரிவாதிக்கத்திற்கும்**

**ஏற்றவாறு 'சட்டம்' ஏற்படுத்தி இருக்கின்றதே ஒழிய மனித நேயத்திற்கும், பொது நீதிக்குமாக சட்டம் இயற்றவில்லை.** அப்படி இருந்தும் தான் போட்டுள்ள சட்டத்தின் சில ஓட்டைகளால் தனது நிலைப்பாட்டிற்கு குந்தகம் வருமேயானல், அதுதான் போட்ட சட்டத்தையும் மதிக்காது தனது அரசியல் முடிவுகளுக்கேற்ப 'நீதிபதி' என்று வீற்றிருக்கும் கனவான்களை 'தீர்ப்பு' வழங்க நிர்ப்பந்திக்கும். அண்மையில் எமது விடுதலை இயக்கத்தின் தோழர்களுக்கு வழங்கிய தூக்குத் தண்டனையும் இனவிரோத, மக்கள் விரோத, தொழிலாளர் விரோத நாட்டுத்துரோக ஜெயவர்த்தன அரசுதான் போட்டுள்ள சட்டந்திற்கே விரோதமானது. சித்திரவதையிலும், கொலை நிர்ப்பந்தத்திலும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் காவல் துறையினர் இயற்றியதுமான 'வாக்கு மூலங்கள்' செல்லுபடியாகும் என்றும் தீர்ப்பு வழங்கியதே மனித நேயத்திற்கு விரோதமானது, தார்மீகமற்றது.

ஏற்கனவே

1) அமைதிவழிப் போராட்டமும்
2) சமரச ஒப்பந்தங்களும்

கால வழக் கொழிந்தவை, போலியானவை என்பதை எமது மக்கள் நன்கு அறிவர். மூன்ருவதாக சட்டத்தின் மூலமும், புரட்சிகர நடவடிக்கைகள் அல்லாத 'அமைதி' வழியிலும் தமிழினத்தின் தலைவிதியை மாற்றி அமைக்கலாம் என்ற பாதையை தமிழ் மக்கள் இறுதியாகக் கிடைத்த தீர்ப்பில் இருந்து புரிந்து கொள்வார்கள்.

எனவே

1) அமைதி வழிப் போராட்டம்
ꝰ) பேச்சு வார்த்தைப் போராட்டம்
3) சட்ட ரீதியான அணுகுமுறை

இவை எவையும் மக்களின் விடுதலையைப் பெற்றுத் தராது.

அடுத்ததாக எமது தாயகத்திலும், தமிழகத்திலும் இருந்து கொண்டு சில சக்திகள் வெளிநாட்டு வல்லரசுகள் தலையிட்டு எமக்கு 'விடுதலை' பெற்றுத் தருவார்கள் என்று போராடும் மக்களை திசை திருப்ப முயற்சிக்கிறார்கள்.

இது எவ்வளவு தூரம் மோசடியானது என்பதை அண்மையில் பாலஸ்தீனியர்கள் இஸ்ரேலியர்களின் வெறித்தாக்குதலுக்கு ஆளானபோது அவர்களைக் காப்பாற்றுவதற்கு எந்த வல்லரசும் முன் வரவில்லை.

எனவே, அமெரிக்காவோ, சோவியத் சமூக மேலாதிக்கமோ எமது மக்களின் விடுதலைக்குத் தரும் 'ஆதரவை' தனது **அரசியல் சுரண்டல் ஆதிக்கம்** என்பவற்றைக் கருத்தில் கொண்டு முடிவெடுக்குமே தவிர மனித நேயத்திற்காகவும் பொது நீதிக்காகவும் அல்ல.

இவற்றில் இருந்து எமது போராட்டமானது, **அமைதி வழிப் போராட்டத்திற்கு அப்பாற்பட்ட சமரச ஒப்பந்த பிற்போக்கு பாராளுமன்ற பாதைகளுப் புறம்பான, அந்நிய வல்லரசுகளின் தலையீடு அற்ற மக்களே ஆயுதம் ஏந்திப் போராடும் யுத்தப் பாதையையே முகாமையாக கொண்டதாக இருக்கும்.** இப்பாதை ஒன்று மட்டுமே தமிழீழத்தையும் அதன் மக்களின் முழுமையான விடுதலையையும் பெற்றுத்தரும் என்பதில் உறுதி உடையவர்களாக இருக்கின்றோம். ⌐

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறீலங்கா ஆயுதப்படையினரின் சித்திரவதைகளை அம்பலப்படுத்து-கிறார் தேவன்.

பனாகொடை இராணுவ முகாமில் அறை ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டேன். 1981 ஏப்ரல் 6ஆம் திகதி நான் அறைக்கு கொண்டு செல்லப்பட்ட போது உடலில் உள்ளாடை ஒன்று மட்டும் அணிந்திருக்க அனுமதிக்கப்பட்டேன்.

அன்றைய தினம் அங்கு எனக்கு உணவு எதுவும் தரப்படவில்லை.

மறுநாள் என்னை வேறு ஒரு அறைக்கு கூட்டிச் சென்றனர்.

அங்கு ஏ. எஸ். பி. ஜுரம்பதி, இன்ஸ்பெக்டர் கனேகம ஆகியோரும் வேறு சிலரும் இருந்தனர்.

ஏ. எஸ். பி. ஜுரம்பதி என்னிடம் தமிழில் கேள்விகள் கேட்டார்.

அங்கிருந்த வேறு சில பொலிஸாரும் என்னிடம் கேள்விகள் பலவற்றைக் கேட்டனர்.

அப்போது ஏ. எஸ். பி. ஜுரம்பதியும், இன்ஸ்பெக்டர் கனேகம ஆகியோரும் மற்றைய பொலிஸாரும் கால்களினாலும், கைகளினாலும் என்னைப் பயங்கரமாகத் தாக்கினார்கள்.

## இன்பம், செல்வம்

அந்த நேரத்தில் இன்ஸ்பெக்டர் கனேகம என்னிடம் "தமிழ் இளைஞர்களான இன்பம் செல்வம் ஆகியோரை உனக்குத் தெரியுமா? அவர்களுக்கு நடந்ததுதான் உனக்கும் நடக்கும்" என்று கூறி என்னைத் தாக்கினர்.

இந்தத் தாக்குதல்கள் சுமார் ஒரு மணி நேரம் நீடித்தது.

அப்போது நீர்வேலி வங்கிக் கொள்ளை பற்றியும் வேறு விடயங்கள் பற்றியும் என்னிடம் கேள்வி கேட்கப்பட்டது. பல கொள்ளை, கொலைச் சபவங்கள் பற்றியும் என்னிடம் கேட்கப்பட்டது.

இத்தகைய விசாரணை, தாக்குதல் ஆகியவற்றின் பின்னர் என்னை மீண்டும் பழைய அறைக்கு கொண்டு வந்து தடுத்து வைத்தனர்.

கொள்ளைகள் பற்றி என்னிடம் கேட்கப்பட்ட போது அதுபற்றி எனக்கு எதுவும் தெரியாது என்று நான் அவர்களிடம் கூறினேன். அவர்கள் விடவில்லை.

கேள்வி கேட்பதும் தாக்குவதுமாக இருந்தார்கள்.

என்னை அறையில் அடைத்த பின்னர், நான் தாக்கப்பட்ட அறையிலிருந்து தங்கத்துரை அடி தாங்காமல் கத்தும் சத்தம் கேட்டது. அவருக்கு அடி விழும் சத்தமும் கேட்டது.

அடுத்த நாளும் என்னிடம் கேள்விகள் கேட்கப்பட்டன. இந்த நடவையும் சுமார் ஒரு மணி நேரம் விசாரணை நீடித்தது.

நீர்வேலி வங்கிக் கொள்ளைப் பணம் பற்றித்தான் என்னிடம் பல கேள்விகள் கேட்கப்பட்டன.

## பணம் எங்கே?

நீர்வேலி வங்கிக் கொள்ளைப் பணத்தின் ஒரு பகுதி என்னிடம் இருப்பதாக குட்டிமணியும், தங்கத்துரையும் தம்மிடம் கூறியிருப்பதாக ஏ. எஸ். பி. ஜுரம்பதி என்னிடம் கூறினர்.

"அந்தப் பணம் எங்கே?" என்று அவர் என்னிடம் கேட்டுத் தாக்கினர்.

நீர்வேலி வங்கிக் கொள்ளைக்கும் எனக்கும் எந்தவித தொடர்புமில்லை. பணத்தைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்று நான் கூறினேன்.

அப்போது இன்ஸ்பெக்டர் கனேகம எஸ்–லோன் பைப் ஒன்றினால் என்னைக் கடுமையாகப் பல தடவைகள் தாக்கினர். பின்னர் "பெட்ரோல் மாக்ஸ்" கொழுவக் கூடிய இரு பக்கமும் வளைந்த ஒரு நீண்ட கம்பியினாலும் அவர் என்னைக் கடுமையாகத் தாக்கினர்.

அன்றைய தினம் மீண்டும் பழைய அறையில் என்னை அடைத்தனர். பின்னர் நான் தாக்கப்பட்ட அறையில் இருந்து தங்கத்துரை கத்தும் சத்தமும் அவர் தாக்கப்படும் சத்தமும் மீண்டும் கேட்டன.

1981 ஏப்ரல் 7,8ஆம் திகதிகளில் இவ்வாறு நான் கடுமையாகத் தாக்கப்பட்டேன். இந்த தாக்குதல்களினால் எனது உடம்பில் வெளிக்காயங்கள் ஏதும் ஏற்படவில்லை. ஆனால் பல உட்காயங்களும். நோவுகளும் ஏற்பட்டன.

9ஆம் திகதி மீண்டும் ஏ. எஸ். பி. ஜுரம்பதி, இன்ஸ்பெக்டர்கள் கனேகம, ஆரியபால, ஹேமச்சந்திரா ஆகியோரால் விசாரணை செய்யப்பட்டேன்.

இம்முறை மிகக் கூடுதலாக, கடுமையாக, பயங்கரமான முறையில் தாக்கப்பட்டேன்.

அன்றிரவு எனது அறையின் பிற் பக்கத்தில் மிகவும் பிரகாசமுள்ள நான்கு மின்விளக்குகள் பொருத்தப்பட்டு, எரியவிடப்பட்டன.

கடுமையான தாக்குதலுக்கு உள்ளாகி இருந்ததாலும், அளவுக்கு மீறிய வெளிச்சம் எனது கண்ணில் பட்டுக் கொண்டிருந்ததாலும் அன்றிரவு முழுவதும் என்னால் தூங்க முடியவில்லை.

மின்விளக்கின் சூட்டினால் நான் தடுத்து வைக்கப்பட்டிருந்த அறை பயங்கர நெருப்பு சூழ்ந்தது போல இருந்தது.

10ஆம் திகதி உடல் மிகவும் சோர்ந்து களைத்து இருந்தேன். நடக்கக் கூட சக்தியிருக்கவில்லை. ஆனால் அன்றைய தினமும் விசாரணை செய்யப்பட்டேன்.

அன்றைய தினம் குட்டிமணி தாக்கப்படும் சத்தம் கேட்டது.

10ஆம் திகதி அவர்கள் என்னை விசாரணை செய்த போது பொலிஸார் ஹேமச்சந்திர, விமலதாஸ ஆகியோர் கடதாசி ஒன்றில் ஏதோ எழுதிக் கொண்டிருந்தனர்.

அந்தச் சந்தர்ப்பத்தில் இன்ஸ்பெக்டர் கனேகம எஸ்–லோன் பைப்பினால் எனது உடலில் பலமாகத் தாக்கினர். அப்போது ஒரு அதிகாரி எனது கைகளை இறுகப் பிடித்துக் கொண்டிருந்தார்.

என்னைத் தாக்கிய போது பல தடவைகள் எஸ்–லோன் பைப்புகள் உடைந்தன. எனினும் அவர்கள் சளைக்காமல் புதிய எஸ்லோன் பைப் துண்டுகளை எடுத்து என்னைத் தாக்கினார்கள்.

இன்பம், செல்வம் ஆகிய இரண்டு தமிழ் இளைஞர்கள் பொலிஸாரால் கடுமையாகச் சித்திரவதை செய்யப்பட்டு இறந்தார்கள்.

அதேபோன்ற நிலைதான் எனக்கும் ஏற்படக் கூடும் என நினைத்தேன்.

ஏப்ரல் 11ஆம் திகதி நான் விசாரணை செய்யப்படவுமில்லை, தாக்கப்படவுமில்லை.

ஆனால் 12ஆம் திகதி என்னிடம் கேள்வி கேட்கப்பட்டு தாக்கப்பட்டேன்.

அன்றைய தினம் நாம் யாழ்ப்பாணம் கொண்டு செல்லப்பட்டோம். அப்போது எமக்கு இராணுவ உடுப்பு அணியத் தரப்பட்டது. இராணுவ தொப்பி, சப்பாத்து ஆகியவையும் தரப்பட்டன.

ஆனாலும் எமது கைகளில் விலங்கிட்டிருந்தனர்.

முதலில் பலாலி இராணுவ முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டோம்.

அங்கு ஏ. எஸ். பி. குணசிங்க, இன்ஸ்பெக்டர் தங்கவேலு ஆகியோர் என்னை தாக்கினார்கள். பின்னர் 14ஆம் திகதி மீண்டும் பனாகொடை இராணுவ முகாமுக்கு கொண்டு வரப்பட்டோம்.

ஒப்புதல் வாக்குமூலம் எடுத்தது எப்படி...?

உண்மைகள் வருகின்றன உலகுக்கு முன்னால்...

"நீர்வேலி கொள்ளை வழக்கில் தேவன் நீதிமன்றம் எதிரில்.."

நீர்வேலி கொள்ளை வழக்கு

– தினபதியிலிருந்து –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலை

# வேள்வியில் பலஸ்தீனம்

* கிருத்தி *

குளிர்காலப் போதின் மழைகொட்டும் இரவில் எருசலம் அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தது. அரபுக்கள் பெரும்பான்மையாக வசித்த குடியிருப்பில் அமைக்கப் பட்டிருந்த செமிறாமிசின் என்ற விடுதியின் (கோட்டல்) முன் 4 பேர் அடங்கிய யூத அழிப்புக்குழு சிற்றுந்தில் வந்திறங்கியது. அவர்கள் விடுதியின் தளத்தில் வெடிகுண்டு ஒன்றை இணைத்து பற்ற வைப்பதில் முயன்றனர். மழையில் நனைந்த திரி பற்றாதபடியால் "திரி நனைந்து விட்டது" என ஒருவன் நடுக்கத்துடன் கூறினான். வெளியே காவல்நின்ற தலைவன் அமைதியாக உள்ளே வந்து குண்டின்முன்னே விருந்துண்ண அமர்பவன் போல் சப்பாணி கட்டி இருந்து "இப்படியான வேளையில் பதட்டம் கூடாது, பயத்தால் எளிதான வேலையும் இயலாததாகி விடும்" என்று கூறியபடி புதுத்திரி ஒன்றைப் பொருத்தி பற்றவைத்தபின் மற்றவர்களையும் அழைத்துக்கொண்டு மறைந்துவிட்டான். அரபுக்களின் சகல காவல் நிலையங்களையும் கடந்து, கொடுக்கப் பட்ட 10 நிமிடங்களில் ஒரு நிமிடம் குறைவான காலத்துளியில் இக்குண்டு வெடிப்பு நடாத்தப்பட்டது. அக்குண்டு விடுதியையே வானத்தில் தூக்கி பின்னர் நிலத்தில் விழவிட்டது. (சிற்றுந்து -CAR )

ஒவ்வொரு யூதனும் தான் சிறுபான்மையாக இருந்த பகுதியில் அமைந்த தனது வீட்டில் இருந்து, தெருவிலிருந்து, நிலத்திலிருந்து நீங்கி இடம் பெயரக் கூடாதென்பது யூத முகாமையகத்தின் அடிப்படைக் கொள்கையாக இருந்தது. ஒர் அடி நிலந்தானும் பறி போகக்கூடாது என்பதே அவர்களது நோக்கமாகும். ஆயினும், நாளுக்குநாள் ஆதிக்கம் தொடர்பான போராட்டமும் கொலைகளும் கலகங்களும் அதிகரிக்க பலஸ்தீனத்தில் அரபு-யூத சமூகங்கள் தாம் சிறுபான்மையாக இருந்த பகுதிகளைவிட்டு நீங்கத் தொடங்கின. யூத மக்கள் இவ்வாறு நீங்குவதை நிறுத்த – யூத முகாமையகத்தின் படைப்பிரிவான 'ககானா' அரபுமக்கள் பெரும்பான்மையாக இருந்த பகுதிகளைவிட்டு அவர்களையே கலைக்க நடவடிக்கை எடுத்தது. அச்சுறுத்தும் துண்டறிக்கைகள், மின்சாரத் தொலைபேசிக் கம்பிகளை அறுத்தல் – எறிகுண்டுகளை சுவர்களில் எறிதல் போன்ற ஆரம்பக் கலைப்பு முயற்சிகள் குறைந்த வெற்றியைத் தந்ததால் – பயங்கர நடவடிக்கைகளில் இறங்கினர். அரபுப்பகுதிகளின் உள் ஆழப்பகுதிகளில் – அவர்களின் பாதுகாப்பு அரண்களை முறியடித்து – மின்னல்வேகத் தாக்குதல்களை நடத்தி வெளியேறினர். இவற்றில் ஏராளமானோர் கொல்லப்பட்டனர். பொதுவான பாதுகாப்பின்மையை உணர்ந்து – தமது தலைவர்களின்மீது நம்பிக்கை இழந்து – கிலி பிடித்து – ஏராளமான அரபுமக்கள் தாம் பாரம்பரியமாக இருந்த பகுதியைவிட்டு நீங்கி – வேறிடங்களுக்கு – வேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயல்நாடுகளுக்குச் செல்லத் தொடங்கினர். இக்கலைப்பு நடவடிக்கையில் ஒன்றாகத்தான் அரபுத்தலைவர்கள் கூடி விவாதிக்கும் இடமான செமிறு விடுதி தாக்கி அழிக்கப்பட்டது.

செமிறு விடுதியில் அழிக்கப்பட்டதற்கு மறுஅடி கொடுக்கும் முகமாக யூதர்கள் பெரும்பான்மையாக இருந்த எருசலமின் இதயப்பகுதியில் வாழ்ந்த யூதர்களின் எழுச்சிக்குரலான 'பலத்தீன அஞ்சல்' என்ற பத்திரிக்கையின் தலைமை அலுவலகம் அரபுக்களால் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டது. களவாடப்பட்ட பிரித்தானிய இராணுவ வண்டியொன்றில் குண்டுபொருத்தப்பட்டது. யூதர்களில் வெறுப்புக்கொண்ட இரு ஆங்கில முன்னாள் போர்வீரர்கள் அதனை ஓட்டிச் சென்றனர். யூதர்களின் சுங்கச்சாவடிகள், பாதுகாவல் அரண்கள் அனைத்தையும் கடந்துவந்த அவ்வண்டி பத்திரிக்கைத் தலைமையலுவலகத்தின்முன் நிறுத்தப்பட்டது. அவ்விரு ஆங்கிலேயரும் தேனீர் அருந்த உணவுச்சாலைக்குச் செல்பவர்கள்போல் வண்டியைவிட்டிறங்கி - எங்கோ மறைந்தனர். பின்னால் சிற்றுந்துவண்டியில் (CAR) வந்த ஓர் அரபு இளைஞன் அதிலிருந்து இறங்கி வாயில் நுழைத்த வெண்சுருட்டுடன் வண்டிக்கருகில் வந்து வெளியில் துருத்திக்கொண்டிருந்த வெடிகுண்டுத்திரியில் வெண்சுருட்டு நெருப்பால் பற்றவைத்தபின் தன் வண்டியில் ஏறிக் கரைந்துவிட்டான். ஒருசில விநாடிகளில் பத்திரிக்கை அலுவலகம் வெடித்துச் சிதறித் தரைமட்டமாகியது. அச்சு இயந்திரங்களும் அதில் வேலை செய்தோரும் அவ்வழிவில் சங்கமம் ஆயினர். ஆனால் பத்திரிக்கை நிற்கவில்லை; யூதர்களின் குரல் ஓயவில்லை. அலுவலகம் தகர்க்கப்பட்டு ஒரு மணி நேரத்துக்குள் பத்திரிக்கை ஆசிரியர் வேறு ஓர் இடத்தில் தற்காலிக அலுவலகம் ஒன்றைத் திறந்தார். இரவோடு இரவாகத் தட்டச்சில் செய்திகள் அடிக்கப்பட்டன. அவற்றைப் படிகள் எடுத்து மறுநாட்காலை வழக்கம்போல் 'பலத்தீன அஞ்சல்' ஒரேயொரு இதழ் உள்ள பத்திரிக்கையாக வெளிவந்தது.

(வளரும்)

*******************************************

ஆயுதப்போராட்டத்தில் நீண்டகால அனுபவமும் தேர்ச்சியும் கொண்ட தோழர்கள் குட்டிமணி, செகன் ஆகியோர் நீதிமன்றத்தில் கொடுத்த வாக்குமூலத்தில் பின்வருமாறு கூறியுள்ளனர்

\- - - - - - - - - - - - -



**தோழர் குட்டிமணி :**

''என் மீது இரகசியப் போலீசார் பலாத்காரத்தைப் பிரயோகித்தனர். கடுமையான சித்திரவதைக்குட்பட்டதால் சில பத்திரங்களில் கையொப்பமிட்டேன். அதன் அடிப்படையில் நீதிமன்றத்தில் வழங்கிய இத்தீர்ப்பை ஏற்க நான் தயங்கவில்லை. இருப்பினும் சில அடிப்படைகளை நான் இங்கேகூற விரும்புகின்றேன். என்னைப் போன்ற எத்தனையோ தமிழ் இளைஞர்கள் இந்நீதிமன்றத்திற்கு கொண்டு வரப்படுவார்கள். அந்த இளைஞர்களும் பயங்கரவாதிகள் என்ற போர்வையின் கீழ் மரண தண்டனைக்கு இலக்காவார்கள். நீதிபதி எனக்கு அளித்த தீர்ப்பின்மூலம் தமிழ்ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு ஒரு புதிய உத்வேகத்தையும் உற்சாகத்தையும் கூட்டி உள்ளனர், என்னைத் தூக்கில் இடுவதன் மூலம் பல்லாயிரக்கணக்கான குட்டிமணிகள் உதயமாவார்கள். அவர்கள் தமிழ் ஈழத்தின் வீரம்மிக்க இளைஞர்களாகவே இருப்பார்கள். என் இனத்திற்காக கொடுக்கக் கூடியதாக இருப்பது, தற்சமயம் என் உயிர் மாத்திரமே. என்னைத் தமிழீழ மண்ணிலேயே தூக்கில் இடுங்கள். என் கண்களைப் பார்வையற்ற ஒரு தமிழ் மகனுக்கு வழங்குங்கள். அதன் மூலம் மலரப்போகும் தமிழ் ஈழத்தை நான் பார்ப்பேன். என் உடலை யாழ்ப்பாண பல்கலைக் கழக மருத்துவ பீடத்திற்கு வழங்குங்கள்.''

வாழ்க தமிழ் ! மலர்க தமிழ் ஈழம் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ●●●●●●●● பசி...! ●●●●●●●●



பசிதீர்க்க நாங்கள் உணவு கேட்டோம் அமெரிக்காவை
தட்டாமல் அவர்கள் தந்தார்கள் பல முட்டை......
அத்தனையும் துவக்குக்கள் அவற்றோடு தோட்டாக்கள்.

இன்று உலகில்......

ஒவ்வொரு நாளும் 40000 குழந்தைகள் போதிய உணவின்றி மடிகின்றார்கள்.

ஆபிரிக்காவில் மாத்திரம் 70 மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் ஒரு வேளை உணவுகூட இல்லாமல் தவிக்கிறார்கள்.

ஒருவேளை உணவு வளர்ச்சியடைந்துவரும் நாடுகளில் உள்ள 75 மில்லியன் 8 முதல் 15 வயது வரையிலான குழந்தைகளைத் தொழிலாளர்களாக மாற்றியுள்ளது.

உலகம் முழுவதும் பஞ்சத்தால் ... பசியால் தவிக்கும் இந்த வேளையில் 231.6 பில்லியன் தாலர்களை ஆயுத உற்பத்திக்கும் தனது பாதுகாப்புச் செலவுகளுக்கும் அமெரிக்கா ஒதுக்கியுள்ளது. தனது மொத்த உற்பத்தி வருமானத்தில் 14 % தினை சோவியத்து யூனியன் ஆயுத உற்பத்தி பாதுகாப்புச் செலவுபோன்றவற்றிற்கு ஒதுக்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TAMOUL MOURASSOU

MURASU 1 * FEVRIER – 1982 * OLY 4


## ACTIONS ARBITRAIRES DE LA POLICE DANS L'EGLISE DE VAVUNIYA DES MOINES BOUDDHISTES PRENNENT PART AUX PROTESTATIONS.

Sept dignitaires religieux représentant toutes les croyances ont fait des représentations au président Jeyawardene contre les "Atrocités de la police" dans St.Antony's Church, à Vavuniya le 15 Décembre 1982.

Leur lettre de protestation déclare, "Nous, Chefs religieux de Vavuniya vous élevons des protestations énergiques au sujet du comportement brutal des officiers de police de Vavuniya qui ont tourmenté et agressé des innocents assemblés dans l'église précitée le 15 Décembre 1982. Dans ce pays, les lieux de culte religieux ont jusqu'à présent été traités avec respect et rénération; nous prenons donc cet incident trés au sérieux et vous demandons de bien vouloir prendre immédiatement des mesures trés sévéres contre ces officiers de police, et aussi d'assurer la liberté de cutte et la sécurité dans les édifices religieux."

Des copies de cette lettre ont été envoyées au premier Ministre, aux membres du Parlment et aux IGP.

## LE C.I.D. A CONVOQUE LE M.P. DE JAFFNA ET LE MAIRE DE JAFFNA POUR ENQUETER:

Le chef du camp militaire de Jaffna a convoqué le M.P. de Jaffna, M.R. Yogeswaran, et le maire de Jaffna, M. Rasa Visvanathan, pour enquêter au sujet de la lutte armée des combattants de l'Elam Tamil. Le maire de Jaffna a déjà enquêté deux fois. En même temps,nous rappelons un autre fait, concernant un homme respectable, M.P. de Jaffna, M.Yogeswaran. Pendant la nuit du 31 Mai 1981, des voyons appartenant à la police de Sri Lanka ont pénétré de Force dans la maison du M.P, l'ont incendiée et ont presque poignardé M. Yogeswaran à mort.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## L'AVOCAT DES DROITS DE L'HOMME INTERROGE PAR LE C.I.D.

L'avocat des Droits de l'homme, I.F.Xavier, de Jaffna qui s'est rendu Mercredi sur convocation au camp militaire de Gurunagar, a été briérement interrogé par un officier de "l'Intelligence Service" du C.I.D. au sujet d'un ancien suspect qui a été remis en liberté. M.Xavier qui figure sur la liste des conseillers juridiques du Saturday Review et qui travaille au sien d'une organisation internationale pour les Droits de l'Homme basée aux Pays-Bas et au Royaume-Uni, a également été interrogé au sujet de son association avec ce journal. On lui a aussi demandé s'il savait que madame Nirmal Nithiyanandan, actuellement en détention préventive à Gurunagar, avait par le passé rempli les fonctions d'adjointe à la Rédaction du Saturday Review. Selon M.Xavier, L'Armée ains ainsi que les officiers du C.I.D. ont été trés courtois.

## BANDITISME SUR LA VOIE PUBLIQUE A JAFFNA DES HOMMES ARMES EN CIVIL ATTAQUENT DES FIDELES A L'EGLISE

Un terible choc attendait les fidéles du quartier Chunduikuli Colombuthurai de Jaffna se rendant à l'office de 11 heures et dmie la nuit du 24 Décembre. Arrivées dans la Grande Rue, ils ont vu des jeeps parquées et des hommes en civil (que l'on croit appartion à l'armée) portant des fusils sophistiqués et attaquant des passants. Il semblerait que les membres du personnel de sécurité Cinghalais, éloignés de leurs familles, "fêtaient" eux-mêmes Noël à leur manière.

## UN MILICIEN DU GOUVERNEMENT BRAQUE UN REVOLVER MEME SUR UN Q.C!

Le Lycée de Jeunes Filles de Colombo a été le théâtre du pire des actes de terrorisme par un milicien du parti Au pouvoir. Ceci s'est passé le jour du Référendum. Dans où la salle de vote il isoloir, le Président du vote a provoqué une personne qu'il suspectait de se faire passer pour une autre. Pendant l'interrogatoire, le suspect s'est énervé au point d'oublier le nom de l'électeur pour lequel il tentait de se faire passer. A ce moment;, un groupe de voyous, évidemment des militants de l'U.L.P., fit irruption dans l'isoloir et maltraita le président. Lorsqu'un Agent de Police qui était de service se précipita pour venir en aide aunprésident, le milicien U.N.P. brandit son révolver et menaça l'agent.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Un groupe d'électeurs, confrenant l'ex-sénateur Nadeson, Q.C. avait protesté contre cet acte arbitraire du milieien . Des témoins oculaires ont dit que le révolver était alors braqué vers le séneteur Nadeson aussi. Ensuite, le groupe de supporters U.N.P. avait pacifié le milicien et l'avait fait sortir de l'isoloir ( où de la salle de vàte)

Ceci n'est qu'un des nombreux zvênements qui ont eu lieu le jour du réferendum et qui ont permis de s'interroger sérievsement sur le caractére " démocratique" du vote.

## VICTOIRE DU REFERENDUM : UN PRODUIT DE LA TERREUR ET DE LA CORRUPTION.

" La soi-disante victoire du Gouvernement au Référendum est un produit de la terreur et de la corruption", déclare un communiqueé de presse émis par le Parti Nava Sama Samaja-

## MEETING DE PROTESTATION A MADRAS.

Un meeting public monstre a eu lieu le 18 Décembre à Madras pour protester contre l'arrestation et L'inearcération de prêtres catholiques, d'un medecin et de professeurs, accusés de soutenir la lutte pour la libération de l'Elam Tamil.

### Développement du bétail:

M.Thondaman a déclaré au cours d'un autre entretien qu'un programme de développement du bétail, évalué à 15 millions de dollars, serait prochainement réalisé à Sri Lanka. Financé par l'Asian Development Bank, de Manille, ce projet couvrirait 12 des 24 régions rurales de l'Ile, selon M. Thondaman.

Le programme dans son ensemble mettrait l'accent sur les besoins de base de la production et sur la santé des animaux, et aussi sur la création d'inffrastructures pour accroître la qualité de cheptel à rendement rapide et de produits de l'élevage.

L'un des aspects de ce programme ambitieux était le plan visant à l'amélioration des bêtes de trait. Ce projet intéresse vivement le gouvernement de Sri Lanka, car il réduirait considérablement la nécessité de recourir à des sources d'énergie non-renouvelables, a-t-il déclaré. Des calculs ont démontré que trois paires de boeufs remplaceraient effectivement un seul cultivateur motorisé.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LE SECOND MANDAT PRÉSIDENTIEL

Colombo. – Debout, immobile, il observe, impassible, le spectacle qui, ce vendredi 4 février, marque l'anniversaire de l'accession de Sri-Lanka à l'indépendance. Face à lui, derrière la mer humaine qui a envahi l'esplanade de Galle Face Green, l'océan, où croise une flotte d'opérette : cinq canonnières qui projetteront dans le ciel bleu des fusées vertes, la couleur du Parti de l'unité nationale, la formation du président, la couleur de la victoire. La cérémonie est ponctuée de quarante-deux coups de canons : vingt et un pour le président sortant, vingt et un pour le nouvel élu qui, à 8 h 1 précises (l'heure propice déterminée par les astrologues), aura été solennellement reconduit dans ses fonctions.

Pour M. Junius Richard Jayewardene (familièrement appelé « J. R. »), cette journée marque le couronnement d'une stratégie qui lui aura permis, en deux étapes, de se réinstaller solidement à la tête du pays.

20 octobre 1982 : se présentant devant les électeurs, quinze mois avant le terme de son mandat, J. R. obtient 53 % des suffrages, devenant le premier président élu au suffrage universel ; 22 décembre : prenant le pays par surprise, il obtient, par référendum, la prolongation pour six ans du mandat du Parlement (qui expirait en juillet 1983), au sein duquel son parti détient une écrasante majorité.

Doté des pleins pouvoirs, il est en mesure de consolider la politique économique libérale suivie depuis 1977. Tacticien comblé, il a désormais les mains libres pour achever son œuvre.

*« Il me fait presque pitié. Il a l'air si seul »*, observe une journaliste locale alors que se poursuit tambour battant, le défilé d'une armée de principauté à désarmer les instincts les plus belliqueux. La remarque conforte le sentiment souvent exprimé d'une présidentialisation du régime, d'un glissement progressif vers l'exercice solitaire du pouvoir, voire de tendances autoritaires illustrées, par exemple, par le recours, fort critiqué, au référendum.

## La guerre de succession

Au bout du compte, s'impose la vision d'un président installé sur un trône aux bases plus fragiles qu'il n'y paraît. Un trône que ne menace pas vraiment une opposition décapitée, divisée et déchirée, mais d'ores et déjà convoité par des successeurs potentiels (le président aura soixante dix-sept ans en septembre) qui cachent mal leur impatience.

La guerre de succession semble bel et bien ouverte, avec ses complots et ses alliances. Les candidats sont connus : Le premier ministre, M. Premadasa, soutenu par le ministre des finances, M. Ronnie de Mel ; M. Lalith Athulath Mudali, ministre du commerce et de la marine marchande ; M. Gamini Dissanayake, qui supervise le projet-phare de l'aménagement de la rivière Mahaweli. Sans oublier, en marge du pouvoir, un redoutable concurrent, M. Upali Wijewardene, homme d'affaires ambitieux, propriétaire de journaux, cousin du président, dont il aurait, paraît-il, les faveurs, et proche du fils de Mme B, Anura, qui, dans l'ombre, flirterait avec le pouvoir.

Autant de factions qui s'épient et dont le jeu compromet la stabilité du régime. D'où l'atmosphère d'incertitude, de malaise, qui règne aujourd'hui dans la classe politique au pouvoir.

Attentisme sur le front politique, mais également sur le front économique quelque peu paralysé par l'activité électorale de ces derniers mois – *« On navigue à vue,* constate un banquier – et où la situation financière (les réserves ne couvriraient que neuf semaines d'importations) exige des décisions urgentes et difficiles. Les élections ont fait repousser le budget et favorisé un certain laxisme. Aujourd'hui, il faut redresser la barre, donner un tour de vis sérieux. *« Cela va faire mal »*, annonce un financier, qui, comme la plupart de ses confrères, ne voit pas comment le pays pourrait échapper à une dévaluation de 10 % à 20 %. Ainsi serait exaucée l'une des « recommandations » de la Banque mondiale.

Cet effritement de l'électorat coïncide, de surcroît, avec une dégradation sensible des rapports entre le gouvernement et les chefs tamouls modérés qui, depuis quelque mois, semblent prendre leurs distances à l'égard d'un pouvoir sourd à leurs revendications (ils ont prôné l'abstention aux présidentielles, combattu le référendum et boycotté la fête de l'indépendance), et n'hésitent pas, à l'occasion, à rappeler leur attachement à la cause de l' « Eelam », l'indépendance du pays tamoul.

Une telle décision favoriserait les exportations et le tourisme, mais alourdirait la facture pétrolière et entraînerait une douloureuse augmentation des prix du pétrole. *« L'inflation va s'aggraver »*, estime un journaliste qui décrit *« un Sri-Lanka contraint d'aller mendier auprès du F.M.I. et plus que jamais d'en subir la loi ».*

Voici en tout cas venu le temps des vaches maigres, de la rigueur et de l'austérité, et les Cingalais sont invités à se serrer la ceinture et à faire preuve de patience. Rien n'est moins évident de la part d'une population réputée « inflammable ». Il restera alors au pouvoir à ne pas céder, en cette passe difficile, à la tentation d'étendre le tour de vis économique au domaine politique.

**PATRICK FRANCÈS.**

---

(1) Selon une étude officieuse réalisée à partir du résultat des présidentielles, le parti au pouvoir ne pouvait espérer obtenir plus de 106 des 196 sièges du futur Parlement.

(2) Du nom d'une fraction d'extrême gauche du mouvement communiste indien. Selon le premier ministre, ce plan prévoyait l'assassinat du président et de ses principaux ministres, l'emprisonnement de Mme Bandaranaïke et la liquidation de son fils, Anura. Formé en 1980, le groupe aurait été dirigé par M. Vidaya Kumara Tunga, gendre de Mme B et vedette de cinéma. Ce dernier a été arrêté puis relâché.

---

● *L'anglais va devenir la langue officielle du Sri-Lanka,* a annoncé mercredi 9 février le président Jayewardene dans un discours télévisé. Il servira de lien entre les Cinghalais et les Tamouls de l'île, et permettra à la jeunesse d'entrer dans l'ère technologique, a ajouté le président. – *(U.P.I.)*

MERCI "LE MONDE"


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரபாத்தும்.... அமிரும்.....



"சுதந்திர பலஸ்தீன ராச்சியத்தை உருவாக்கும்வரை பலஸ்தீன விடுதலை இயக்கம் தனது ஆயுதப் போராட்டத்தை தொடர்ந்து நடத்தும். 18 வருடங்களுக்கு முன்னம் சியோனிச (யூத) எதிரிக்கு எதிரான எமது ஆயுதப் புரட்சி உருவானது. இன்று நாம் அந்த சூளுரையை மீண்டும் செய்து கொள்ளுகிறோம். விடுதலை, வெற்றி, சுதந்திர பலஸ்தீனிய இராச்சியம் உதயம் இவற்றை அடையும் வரை எமது புரட்சியைத் தொடருவோம் - இப்படி நாம் சங்கற்பம் எடுக்கிறோம். எமது சகல கொமாண்டோக் கொரில்லாக்களும் ஒருமைப்பாட்டுடன் இருப்பார்கள். வெற்றியை எட்டும் வரை அவர்களின் விரல்கள் துப்பாக்கி விசையை அழுத்திய வண்ணமே இருக்கும்..."

**- யசீர் அரபாத் -**



"தேசிய அரசாங்கத்தின் மூலம் தென்னிலங்கை அரசியல் வானில் உறுதிப்பாடு ஏற்படும் சாத்தியம் உண்டு. இதனால் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நாம் அந்த தேசிய அரசாங்கத்துடன் அவ்வப்போது பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைகளுக்குப் பரிகாரம் தேட முயலுவோம்..."

"1977ஆம் வருட பொதுத் தேர்தலில் நாம் மட்டக்களப்பிலும் பொத்துவிலிலும் வெற்றி பெற்றோம். அதே வெற்றி கடந்த சர்வசன வாக்கெடுப்பிலும் எமக்குக் கிட்டியுள்ளது. எனவே அரசாங்கம் எம்மிடமிருந்து பறித்த இந்த இரு தொகுதிகளையும் எமக்கு விட்டுத்தர வேண்டும். இதனை அரசாங்கத்தின் மனச் சாட்சிக்கு விட்டு வைக்கிறோம்..."

**- அமிர்தலிங்கம் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சஞ்சாரம்

∴ பிரான்சு

## வெளிநாட்டவர் பிரான்சுக்கு வருவதில் பெருங்கட்டுப்பாடுகள்

பிரான்சில் பெருகிவரும் வெளிநாட்டுக் குடியேற்றக்காரர்களைக் கட்டுப்படுத்தும்பொருட்டு பிரஞ்சு அரசு கடுமையான நுழைவுஅனுமதிக் கட்டுப்பாடுகளை அமுல் நடத்திவருகிறது. கடந்த வருடம் 46 ஆயிரம்பேர் நுழைவு அனுமதிப்பத்திரம் இருந்தும் நாட்டுக்குள் நுழையவிடாமல் திருப்பியனுப்பப்பட்டுள்ளனர். ஆசிய, ஆப்பிரிக்க நாட்டவர்களுக்கே கூடுதலான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. கடந்த வருடம் திருப்பியனுப்பப்பட்டவர்களில் 17,000 பேர் அல்சீரியராவர். இக்கட்டுப்பாடுகள் அல்சீரியா, துனீசியா போன்ற நாடுகளுக்கும் பிரான்சுக்குமிடையில் கசப்புணர்வைத் தோற்றுவித்துள்ளது.

## கோர்சிகா தேசிய விடுதலை முன்னணி தடை செய்யப்பட்டது

கோர்சிகாவை பிரான்சின் ஆட்சி அதிகாரத்திலிருந்து நீக்கி தனிநாடாக்க வேண்டும் என்று கோரி ஆயுதப் போராட்டம் நடத்திவரும் கோர்சிகா தேசிய விடுதலை முன்னணியினை பிரான்சின் சோசலிச அரசு தடை செய்துள்ளது. இதையடுத்து கோர்சிகாவில் வன்முறைகள் அதிகரித்துள்ளது. விடுதலை இயக்கத்துக்குத் தலைக்கு 450 தாலர் வரி செலுத்தவேண்டும் என்று முன்னணி விடுத்த கோரிக்கையை அசட்டை செய்த பிரஞ்சு வணிகர் சுடப்பட்டதையடுத்து வன்செயல்கள் உருவெடுத்தன. இவ்வியக்கத்தையும் வன்செயல்களையும் அடக்கி நிலைமையைக் கட்டுப்படுத்த குடியரசுத்தலைவர் மித்திரன் விசேட காவல் அதிகாரி ஒருவரை கோர்சிகாவுக்கு நியமித்துள்ளார். முந்தைய அரசு விதித்திருந்த கடுங்கட்டுப்பாடுகளை சோசலிச அரசு தளர்த்தி கோர்சிகாவின் ஆளுமையைத் தேர்தல் மூலம் பரவலாக்கியது. தற்போது நியமிக்கப்பட்ட காவல் அதிகாரியின் கட்டுப்பாடுகளையும் மீறி தொடர்ந்து துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களும் குண்டு வெடிப்புகளும் நிகழ்ந்து வருகின்றன! 1982இல் நடந்த 800 குண்டு வெடிப்புக்களுக்கும் விடுதலை முன்னணி பொறுப்பேற்றுள்ளது!

## பல தொழிற்சாலைகளில் வேலைநிறுத்தங்கள்

தொடர்ந்து நடைபெற்றுவரும் வேலை நிறுத்தங்களால் பிரான்சில் ஏற்கனவே நலிவடைந்துள்ள பொருளாதாரம் மேலும் சீர்குலைய வழிகோலியுள்ளது. இதனால் நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தி குறைவதுடன், பிரஞ்சுப் பிராங்கின் பெறுமதியும் குறைந்துகொண்டு போகின்றது. வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட பல தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேற்குச் செருமனி

### வேலையற்றோர் எண்ணிக்கை பெருகுகிறது

மேற்குச் செருமனியில் வேலையற்றவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. தற்போது 8.4 %மாக, அஃதாவது 2.04 மில்லியன் தொழிலாளர்கள் வேலையற்றவர்களாக இருக்கிறார்கள். இவ்வாண்டு முடிவில் இது 12.5%ஆக அஃதாவது 3 மில்லியனாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நாட்டிலுள்ள 9,560 நிறுவனங்கள் மூடப்படும் நிலையை அடைந்துள்ளன. பல தொழிற்சாலைகள் மூடப்பட்டும் உள்ளன. ஒக்சுவேகன், ஒலிம்பியா, போன்ற பெரும் நிறுவனங்கள் இழப்பில் இயங்கத் தொடங்கியுள்ளன. 1983 ஆம் ஆண்டின் நாட்டின் மொத்த உற்பத்தி வளர்ச்சி 0 ஆக அல்லது எதிர்மறையாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்தசில ஆண்டுகளாகக் கைத்தொழில் உற்பத்தியில் மே. செருமனி முன்னணியில் இருந்தது தெரிந்ததே! மார்ச்சு மாதம் நடைபெறவிருக்கும் தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சிக்கு வரப்போகும் எந்தக்கட்சியானாலும் பெரும்சிக்கலை எதிர்நோக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

## அமெரிக்கா

### அமெரிக்காவில் பஞ்சம்

மோட்டார்வாகன உற்பத்தியில் சிறப்பு பெற்ற அமெரிக்கநகரான டெட்ராயிட்டு பெரும் பஞ்சத்துக்குள்ளாகியுள்ளது. கருப்பு இனமக்கள் பெருமளவில் வாழும் இந்நகரில் வேலையில்லாத் திண்டாட்டம் 25 %ஆகப் பெருகியுள்ளது. தொடர்ந்து பல தொழிற்சாலைகள் மூடப்பட்டு வருகின்றன. நகரத் தந்தை (மேயர்) நகரில் அவசர காலச் சட்டத்தைப் பிரகடனம் செய்துள்ளார். உணவுப் பொருட்களுக்குப் பெருந் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. 'சூப்பு' வழங்கும் கொட்டகைகளை ஏற்படுத்தி மக்களுக்கு உணவு வழங்கும் பணிகள்மேற் கொள்ளப்பட்டுவருகின்றன. அது மாத்திரமன்று, அமெரிக்காவின் மற்ற நகரங்களான போனெக்சு, மியாமி, பப்பல்லோ ஆகிய நகர்களிலும் இந்நெருக்கடிநிலை ஏற்படக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது. பொருளாதார உச்சியில் நின்ற அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள இந்நிலை முதலாளித்துவப் பொருளாதாரக் கொள்கைக்குக் கிடைத்த பெரும் அடியாகும். மக்கள் பசியாலும் பட்டினியாலும் பரிதவிக்கும் இதே நேரத்தில் இரீகனின் திருமண ஆண்டுவிழா மார்ச்சு மாதம் 'எலிசபெத்து அரசி' என்னும் கப்பலில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## உருசியா

### உருசிய-சீன உறவில் புதுத்திருப்பம்

உருசியத் தலைவர் ஆந்திரப்போவ் பதவி ஏற்றபின்னர் உருசியாவுக்கும் சீனவுக்கும் இடையிலான உறவில் வரவேற்கத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளது. இருநாடுகளின் உறவுகளும் மீண்டும் நெருக்கமடைவதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீன மூன்று கோரிக்கைகளை முன்வைத்துள்ளது. அவற்றுள் ஒன்றான
மங்கோலிய எல்லையிலிருந்து தன் படைகளை விலக்கும் கோரிக்
கையை உருசியா ஏற்றுள்ளது. அடுத்த கோரிக்கைகளான ஆப்கா
னித்தானத்திலிருந்து உருசியப்படைகளை விலக்குவதுபற்றியும், கம்பூ
ச்சியாவில் ஆக்கிரமிப்புச் செய்யும் வியத்நாமியப்படைகளுக்கு வழ
ங்கும் ஆதரவை நிறுத்துவது பற்றியும் உருசியா கருத்து எதுவும் கூற
வில்லை. எது எப்படியிருப்பினும் இரு பொதுவுடைமை நாடுகளுக்கு
மிடையில் ஏற்படும் உறவு அமெரிக்காவுக்கு பெருத்த அடியாகும்.

∴ பலத்தீனம்

அரபாத் - உசேன் உடன்பாடு - உருசியா ஆதரவு

பலத்தீன விடுதலை இயக்கத் தலைவர் யசீர் அரபாத்தும், யோ
ர்தான் மன்னர் உசேனும் ஆரம்பக்கட்டமாக யோர்தானுடன் இ
ணைந்த பலத்தீன நாட்டை அமைப்பதுகுறித்து நடத்திய பேச்சு வெ
ற்றியடைந்துள்ளது. உருசியாவுக்குப் பயணத்தை மேற்கொண்ட அர
பாத் மேற்படி பேச்சின் விளக்கங்களை விரித்துரைத்து உருசியாவின்
ஆதரவையும் பெற்றுள்ளார். அதே வேளையில் அரபாத்தின் இந்நட
வடிக்கைகளை வன்மையாக எதிர்த்து விடுதலைபெற்ற பலத்தீனஅரசு
அமைப்பதையே குறிக்கோளாகக் கொண்ட பலத்தீன விடுதலை இய
க்கத்தின் 5 தீவிரவாதப் போராளிகள் இலிபியாநாட்டுத்தலைவர்
கடாபியுடன் மறைமுகப் பேச்சு மேற்கொண்டுள்ளனர்.

∴ பிரித்தானியா

பலத்தீனிய பிரதிநிதியை சந்திக்க பிரித்தானியப் பிரதமர் மறுப்பு

அரபுநாடுகளின் வெளிநாட்டமைச்சர்களுக்கும் பிரித்தானியப்பிரதமர்
மார்கரேட் தாட்சருக்கும் இடையிலான சந்திப்பு ஒன்றுக்கு இலண்ட
னில் ஏற்பாடாகியிருந்தது. இதில் கலந்துகொள்ள வந்த அரபு அ
மைச்சர்கள் தம்முடன் பலத்தீனிய விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த
பிரதிநிதியும் கலந்துகொள்வார் என்று அறிவிக்கவே, தாட்சர் இது
வெளியுறவு அமைச்சர்களின் சந்திப்புக்கூட்டம் எனவும் இதில் ப.வி.
இயக்கப் பிரதிநிதி பங்குபெற முடியாது என்றும் கூறிவிட்டார். இ-
தையடுத்து இச்சந்திப்புக்கூட்டமே தள்ளிப்போடப்பட்டுவிட்டது. இச்
சம்பவம் பிரித்தானியாவுக்கும் அரபுநாடுகளுக்கும் இடையிலான உற
வில் விரிசலை ஏற்படுத்தியுள்ளது. பிரித்தானியாவின் பெருமளவு உற்
பத்திப் பொருட்கள் அரபுநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவது கு
றிப்பிடத்தக்கது.

∴ அயர்லாந்து

ஐ-ஆர்.ஏவின் போராட்டம் தொடர்கிறது

அயர்லாந்து விடுதலைப் படையினர் பிரித்தானிய ஓராண்மைக்கு எதி
ராகத் தொடர்ந்து போராடி வருகின்றனர். அண்மையில் தொடர்
ச்சியாக பல குண்டுவெடிப்புக்களும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் நிகழ்ந்துள்ளன. இவற்றில் ஆக்கிரமிப்புப் பிரித்தானியப்படைகள் கொலையுண்டும், காயமுற்றும், பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

∴ நிக்கரகுவா

புரட்சி அரசைக் கவிழ்க்க அமெரிக்கா பலமுனைகளில் சதி!

நிக்கரகுவாவின் சாண்டினித்திய புரட்சிஅரசைக் கவிழ்ப்பதற்காக அமெரிக்கா பலவழிகளிலும் முயன்றுவருவது தெரிந்ததே. சமீபத்தில் முன்னாள் சர்வாதிகாரி சமோசாவின் கூலிப்படைகள் அமெரிக்கர்களால் பயிற்றப்பட்டு கொண்டுராசில் இருந்து நிக்கரகுவாவிற்குள் ஊடுருவல் செய்ய முயன்றபோது, நிக்கரகுவாவின் ஆயுதப்படைகளால் அடித்துவிரட்டப்பட்டுள்ளனர். இவர்களின் இரகசிய மறைவிடங்களும், தகர்க்கப் பட்டுள்ளன. அதேவேளையில் சமீபத்தில் பதவிவிலகிய நிக்கரகுவாவின் அமெரிக்காவிற்கான தூதுவர் பல இலட்சம் டாலர்களை வங்கிக் கணக்கில் இருந்து கையாடியுள்ளதாக நிக்கரகுவா அரசால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

∴ எல்சல்வதோர்

விடுதலைப்போராளிகட்கு வெற்றிகள் குவிகிறது.

எல்சல்வதோரின் இடதுசாரி விடுதலைப் போராளிகள் தொடர்ந்து வெற்றிகளை ஈட்டிவருகின்றனர். நாட்டின் வடமேற்குப் பகுதியிலுள்ள நகர் ஒன்றை இராணுவத்தினரிடம் இருந்து கைப்பற்றிய இவர்கள், தற்போது தலைநகரிலிருந்து 140 கிலோமீற்றர் தொலைவிலுள்ள நகரைநெருங்கி வந்துள்ளனர். அமெரிக்க ஆயுதங்கள், பயிற்சியாளர்சகிதம் இவர்களுடன் எதிர்த்துப் போர்புரிந்த இராணுவம் பல இடங்களில் பலத்த சேதத்திற்கும், தோல்விக்கும் உள்ளாகியுள்ளது. அதேவேளையில், பாதுகாப்பு அமைச்சரும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அடிவருடியுமான கில்லர்மோகாசியாவை பதவியிலிருந்து விலகுமாறு கோரி படைத்தளபதி ஒசோபேர்சின் தலைமையிலான இராணுவத்தினர் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்துள்ளனர். விரைவில் பாதுகாப்பு அமைச்சர் பதவியிலிருந்து விலகலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

∴ ஆப்கானித்தானம்

ஆப்கனில் உருசிய ஆக்கிரமிப்பு மூன்றுமாண்டாகத் தொடர்கிறது

உருசியப்படைகள் ஆப்கானித்தானத்தில் நுழைந்து அந்நாட்டு ஆளுமையைத் தம்பிடிக்குள் கொண்டுவந்து 3ஆண்டுகள் ஆகிவிட்டன! அங்கே தற்போது 1,05,000 உருசியப் படைவீரர் நிலைகொண்டுள்ளன உருசியப்பிடியிலிருந்து தாய்நாட்டைமீட்க ஆப்கன் விடுதலைப்படையான முயாகிதீன் கொரில்லாப் போராளிகள் தொடர்ந்து போராடி வருகின்றனர். விடுதலைப் போராளிகளின் தாக்குதல்கள் உருசியப்படைக்குப் பெரும் இழப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. அண்மையில் உருசியரால் விமானமூலம் ஆப்கன் கிராமத்தில் வீசப்பட்ட குண்டுவீச்சில் 48பேர் கொல்லப்பட்டனர். உலகநாடுகள் ஆப்கனைவிட்டு உருசியா வெளியேறவேண்டுமென்று முனைந்து வருகின்றன!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியா

### இந்திராவின் செல்வாக்கு வீழ்ச்சி

நடந்துமுடிந்துள்ள ஆந்திரா, கருநாடக மாநிலத்தேர்தல்களில் முறையே நடிகர் இராமராவின் 'தெலுங்குதேச'க்கட்சியிலும், கருநாடகக்கிரந்தி அரங்கக் கட்சியிலும் முற்றாக இந்திராகாங்கிரசு தோல்வியுற்று, 30 ஆண்டுகளாகத் தொடர்ந்த காங்கிரசு ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. இதேவேளை வடநாட்டில் திரிபுராவில் பொதுவுடைமைக்கட்சி இந்திராகாங்கிரசை முறியடித்துள்ளது. இதனால் இந்திராவின் செல்வாக்கிலும், இந்தியநாட்டின் இந்திராக்கட்சியின் அதிகாரத்திலும் பெருந்தடுமாற்றம் ஏற்பட்டுள்ளது. இதன்பின் தில்லி மாநகராட்சிக்கு நடைபெற்ற தேர்தலில் ஒருவாறு பெரும்பான்மைபெற்று தம் செல்வாக்கு குறையவில்லை என்று காட்ட இந்திராவுக்கு வாய்ப்புக் கிடைத்தது. நான்கு ஆண்டுகளாக வங்கதேசவந்தேறிகளை வெளியேற்றக் கேட்டு தொடர்ந்து அசாம் மக்கள் போராடி வரும் இந்நேரத்தில் அங்கே பிப்ரவரி 14 முதல் 17வரை தேர்தல் திணிக்கப்பட்டு, இதுவரை கணக்கற்ற அசாமிய எதிர்ப்பாளர்கள் இந்திரா ஆட்சியின் வெறியாட்டத்திற்கு இரையாகிவருகின்றனர். வந்தேறிகளின் வாக்குகளைக்கொண்டு இந்திரா வென்றுவிடத் திட்டம் தீட்டியிருப்பதை அனைத்து எதிர்க்கட்சிகளும் கண்டித்து தேர்தலைப் புறக்கணிக்கத் தீர்மானித்துள்ளன. தென்னாட்டில் கேரளா நீங்கலாக உள்ள மாநிலத்தேசியக்கட்சி அரசுகள் தமக்குள் கூட்டுறவை ஏற்படுத்தி, தென்னாட்டு மக்களின் தேவைகளுக்குத் தமக்குள் நிலையான கருத்தை உருவாக்கி மக்களுக்கு உதவும்வகையில் கூட்டரசு ஒன்றை அமைக்கும் பணி தென்னாட்டில் இப்போது நடந்துவருகின்றது.

## இசரயேல்

### இசரயேலின் தலைநகரில் பலத்தீனிய விடுதலைவீரர் தாக்குதல்

இசரயேலியத் தலைநகரான தெல் அவிவில்வைத்து வாகனம் ஒன்றுக்கு பலத்தீன விடுதலை இயக்கத்தினர் இரு கைக்குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தியுள்ளனர். இச்சம்பவத்தில் 3 பயணிகள் படுகாயமடைந்துள்ளனர். முன்பு இலெபனனில் இசரயேலியப்படையினர் சென்றுகொண்டிருந்த வண்டியொன்று ப.வி.இயக்கத்தினரால் தகர்க்கப்பட்டது. அதில் 21 படைவீரர் காயமடைந்தனர். தென் இலெபனனிலும் தெல் அவிவிலும் ஏறத்தாழ ஒரே சமயத்தில் திட்டமிட்டு நடக்கப்பட்ட தாக்குதல்களில் 30க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். 1975இல் தெல்அவிவில் நிகழ்ந்த தாக்குதலுக்குப்பிறகு நடந்த மோசமான தாக்குதல் இதுவே என்று கருதப்படுகிறது.

### இசரயேல் பாதுகாப்பமைச்சர் பதவி விலகல்

பலத்தீன முகாம்களில் கடந்த செப்டம்பரில் அகதிகள் படுகொலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்ட சம்பவத்தையொட்டி யூதமக்களின் கடும்போராட்டத்திற்குப்பின் அரைமனதுடன் பிகின் அரசினால் அமர்த்தப்பட்ட ஆய்வுக்குழு இப்போது தனது தீர்ப்பை வழங்கியுள்ளது. பிறவிப்பகைவர்களான இலெபனனிய பலாஞ்சியக் கிறித்தவப்படையினரைக்கொண்டு சபுரா, சதீலா முகாம்களில் இப்படுகொலையை நடத்தவிட்டு வேடிக்கைபார்த்துக்கொண்டிருந்த இசரேலியப் படைத்தலைவர்களும், இசரேலிய (பிகின்) அரசும் அக்கொலைக்கு மறைமுகக் கூட்டாளிகளாவர் என்று அத்தீர்ப்பு கூறுகிறது. மூன்று படைத்தளபதிகளையும் இசரயேலின் பாதுகாப்பமைச்சர் சரோனையும் இதற்குப் பொறுப்பாளிகளாகக் காட்டி அவர்களை பதவி விலக்கும்படி அத்தீர்ப்பு அறிவுறுத்தியுள்ளது. சரோன் விலக மறுத்தார். ஆனால் உடனடித் தேர்தல் வைத்து இப்போதுள்ள மக்கள் ஆதரவைக்கொண்டு தம் பதவியைக்காப்பாற்றிக் கொள்ள முனைந்துள்ள பிகின் சரோன் விலகவேண்டுமென்று அமைச்சரவைக்கூட்டத்தில் வாக்களிக்கவே வேறுவழியின்றி சரோன் இப்போது பதவிவிலகியுள்ளார். இதனிடையில் அமைதி வேண்டும் என்றும் பிகின் பதவி விலகவேண்டும் என்றும் கேட்டு ஊர்வலம் நடத்திய எதிர்க்கட்சியினர்மீது சரோனின் மதவெறிக் கயவர் எறிந்த கைக்குண்டால் ஒரு யூதர் கொல்லப்பட்டார். இதுவே யூத வரலாற்றில் யூதரால் மற்றொரு யூதர் கொல்லப்பட்ட முதற் சம்பவமாகும்!

∴ <u>பொலிவியா</u>

<u>நாசிசக் கொலைஞன் பார்பி பிரான்சுக்கு அனுப்பப்பட்டான்</u>

பிரான்சிலுள்ள இலியோன் நகரில் இட்லர் காலத்தில் யூதமக்களையும், பிரான்சுக்கு உரிமைவேண்டிப் போராடியபிரஞ்சுமக்களையும் கிட்டத்தட்ட 7,000பேரைச் சித்திரவதை செய்து, கொலைக்கு அனுப்பிவைத்த கொடும்பாவியான குளோசு பார்பி பொலிவியாவில் அடைக்கலம் புகுந்திருந்தான். மித்திரானின் தனி முயற்சியால் சட்டச்சிக்கல்களுக்கு இடையில் தந்திரமாக பார்பியைப் பிரஞ்சுஅதிகாரிகளிடம் கையளித்தது பொலிவியாவின் சமவுடைமைக்கட்சியின் இன்றைய ஆட்சி. அவனால் கொல்லப்பட்ட - சித்திரவதை செய்யப்பட்டவர்களின் சாட்சிகள் தொகுக்கப்பட்டு அவனுக்கு ஆயுள்தண்டனை வழங்கப்படவுள்ளது. பிரான்சில் கடந்த ஆண்டு தூக்குத்தண்டனை ஒழிக்கப்பட்டுவிட்டது.

∴ <u>ஈராக்கு</u>

<u>போரில் தளர்ந்துள்ள ஈராக்குக்குப் பிரான்சு உதவி</u>

ஈரானுடன் நடத்திவரும் போரில் தளர்ந்து பின்வாங்கிவரும் ஈராக்குக்கு உதவ பிரான்சு முன்வந்துள்ளது. 28 பில்லியன் பெறுமான ஆயுதங்களையும் அரபுநாடுகளின் பக்கத்துணையையும் திரட்டித்தர பிரான்சு முனைந்துள்ளது. அசுரவலிவு கொண்ட 'எக்சோசெட்' எரியம்புகளையும் அகனைத் தாங்கிச் செல்லும் விமானங்களையும் பிரான்சு ஈராக்குக்கு விற்க ஒப்பந்தம் செய்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மூலம் பிரெஞ்சு

( பாகம் 12 )

கடந்த இதழில் EN எங்கெங்குப் பாவிக்கப்படும் என்பதைப் பார்த்தோம். இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது பிரதியிடப்படும் பெயர்ச்சொல் Article indéfini யாகவோ (un, une, des ) அல்லது partitif ஆகவோ (eg. du, de la, des) இருக்கவேண்டும்.

இனி மேலும் சில எண்களை முடித்துக்கொண்டு மேலே செல்வோம். எண்கள் :

101 Cent un (சான் அன்) 102 Cent deux

...

199 Cent quatre-vingt dix-neuf (சான் கத்திரவேன் தீசு-நெ்ஃப்)
200 Deux cents (தே சான்)
201 Deux cent-un

...

900 Neuf cents
1000 Mille (மீல்) 2000 Deux Mille (தே மீல்)
100,000 Cent Mille (சான் மீல்)
1,000,000 Un Million (அன் மில்லியோன்)
1,000,000,000 Un Milliard (அன் மில்லியார்)

குறிப்பு :- இருநூற்றில் வரும் Cents இல் ஒரு 's' கூடியிருப்பதையும், இருநூற்றி ஒன்றில் அஃது இல்லாதிருப்பதையும் கவனிக்கவும்.

மேலும் சில எண்கள் :

19,562 Dix-neuf mille cinq cent soixante deux
(தீசு-நெஃப் மீல் சேன் சர்ன் சொசாந்து-து)

734,689 Sept cent trente quatre mille six cent quatre-vingt-neuf
(செத் சான் திரான்த்-காத்ரு மீல் சீ சான் காத்ரு-வேன் நெஃப்)

| | | |
|---|---|---|
| Le double | தூபிள் | இரட்டிப்பு, இருமடங்கு |
| La moitié | லா மோத்தியே | அரைப்பங்கு |
| demi | தெமி | அரை |
| le tiers | லெ தியர் | மூன்றில் ஒன்று |
| le quart | லெ கார் | காற்பங்கு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| le cinquième | லெ சேன்கியம் | ஐந்தில் ஒன்று |
| premier (m)<br>première (f) | பிரமியே | முதலாவது |
| deuxième | தூசியம் | இரண்டாவது |
| troiszième | த்ருவாசியம் | மூன்றாவது |
| dixième | தீசியம் | பத்தாவது |
| onzième | ஓன்சியம் | பதினோராவது |

இவ்வாறே மற்ற எண்களுக்கும் இறுதியில் "ième" ஐக் கொண்டு முடியும்.

PROPOSITIONS

| | | |
|---|---|---|
| Devant | தெவான் | முன்னால் |
| Entre | ஆன்த்ரு | இடையில் |
| Derrière | தெரியர் | பின்னால் |
| au-dessus | ஒ தெசு (de) | க்கு மேலே |
| au-dessous | ஒ தெசூ (de) | க்குக் கீழே |

eg. la chaise est au-dessus de la table.

le livre est au-dessous de la table.

eg. 1, 2, 3

Un est devant deux.

Deux est entre un et trois.

Trois est derrière deux et deux est derrière un. (வளரும்)

****************************************

"தனக்கும் உதவான்; தமிழ்க்கும் உதவான்!
தன்இன நன்மைக்கும் நாட்டுக்கும் உதவான்!
மனக்குழப் பத்தினால் மாளினும் மாள்வான்;
மற்றவர் முயற்சியை நம்பவும் மாட்டான்!
இனத்தைக் கெடுப்பதில் இவன்பெரும் எத்தன்;
இருப்புக் கோடரிக் காம்புக்குக் கொம்பன்!
என்னினும் ஒருகை பார்த்திடலாம்! - அவன்
ஏற்றத்தில் நறுநீர் வார்த்திடலாம்!
எனக்குத் தெரியும் இந்தத்தமிழன்
என்றைக்கும் திருந்திட மாட்டான் என்பது!"

– பாவலரேறு பெருஞ்சித்திரனார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஈழ விடுதலை சாத்தியம்

.:. கந்தவனம் குமாரசாமி .:.

(3)

இந்த நோக்குடன் தமிழீழத் தனிமனிதரான செல்வாவின் மனத்
துள்ளே வித்தாகி முளைப்பதற்குத் தமிழர்கள் மனங்கள் என்ற விளை
நிலத்தை வேண்டி நின்றார். தொடக்கத்தில் இருளில் வாழ்ந்த பதில்
ஈனமாக இருந்தது. தனிச்சிங்களச்சட்டம் செல்வாவின் குரலுக்கு வ
லுவூட்டியது. தமிழர்கள் தாம் எங்கிருக்கிறோம் என்பதை உணர்ந்தா
ர்கள். வித்து முளைக்க விளைநிலம் இன்னுமா வேண்டும்? 30க்கும்
மேற்பட்ட ஆண்டுகளில் பெருமரமாக தனித்தமிழீழம் வளர்ந்துவிட்டது.
அதுவே தமிழீழம் பிறந்துவிட்டதன் எதிரொலி. பிறந்த குழந்தை அ
ல்ல அது; கட்டான இளங்கன்னி - எம்பொன்னார் தமிழீழம். இவளை
காமுகர் கற்பழிக்க முயலும்போது காப்பது நம்கடன்.
அதற்காக எத்தகைய தியாகத்தையும் தமிழ்மக்கள் செய்யக்காத்தி
ருக்கிறார்கள். இதற்காக வீரச்சாவு எய்திய இளைஞர்களுக்கு எம் க
ண்ணீருடன் கூடிய அஞ்சலி! அஞ்சலி! அஞ்சலி! எப்படி இவர்களுக்கு ந
ன்றி கூறினும் நெஞ்சம் அழுதுகொண்டேயிருக்கிறது. மாற்றார் சோர்
வுற்றபோது எம்மை எதிர்க்க ஆயுதம் இன்றி எம் பொருளாதாரத்
தைப்பற்றி வினவுகிறார்கள். எம் வீட்டுச் சிக்கல் தமிழ் மன்னர்கள் ஆ
ண்ட இப்பூமியில் எப்படித் தீர்த்து வைக்கப்பட்டிருக்கிறது? அன்று ஆண்
ட மன்னர்கள் சோற்றுக்காக மட்டும் வாழவில்லை; பகைவன் உள்ஏ
றிய போது போர்களை ஆண்டுக்கணக்கில் நடத்தியிருக்கிறார்கள். எங்
கிருந்து வந்தது அப்பொருளாதாரம்? எம்மிடம் போதிய பொருளா
தாரம் உண்டு. இதைத்தரும் வளங்களை மாற்றார் சீரழிக்கின்றனர்!
இங்கு நிறைந்திருக்கும் கனிகளைத் தம் வீடுகளுக்கு அடாவடித்தனமாக
எடுத்துச் செல்கின்றனர். மலைநாட்டில் பனியிலே, மழையிலே, வெ
யிலிலே, கண்ணீரிலே, கவலையிலே, இரத்தத்திலே உழைத்துக்கொடு
த்த எம் உடன்பிறப்புக்களின் செல்வங்களைப் பங்குபோட்டு எத்தர்க
ள் புசிப்பதுபோல எமக்குள்ள வளங்களை மக்களாட்சி என்று அநாக
ரிகத்தின் பெயரில் சூறையாடி எம்மை வறுமையில் ஆழ்த்துகின்றார்கள்.
இச் செயற்கையான வறுமைநிலையை இயற்கையாகக் காட்டி தொ
டர்ந்து தமிழீழத்துக்குப் போராடினால் காற்றைக் குடித்து, கல்லை
மண்ணைத் தின்ன வேண்டிய நிலையே ஏற்படும் என்று ஏமாற்றுகிறார்க
ள். எங்கள் நீர்ச்சிக்கல், நிலச்சிக்கல்களை மாந்தத்தன்மையற்ற
நிலையில் உதறித்தள்ளி தம்பிடியை இறுக்கிக் கொண்டேயிருக்கிறார்கள்.
நாம் இழந்து கொண்டே இருக்கிறோம். எனினும் எம் தாகத்திற்காக
இத்துணையும் ஏன் அனுபவிக்கிறோமோ அது கட்டாயமாக ஒருநாள்
கைகூடும் என்று போராடிக் கொண்டேயிருக்கிறோம். பச்சோந்திக
ளின்போக்கு இங்கே வேண்டாம். பாலிலே தூசும் விழுவதுமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகண்ட கடலைப்பாருங்கள் நாவாய் ஓட்டி வளம் சேர்த்த தமிழினம் அங்கே ஏக்கத்துடன் பார்க்கிறது. தமக்கென ஒரு சுடுகாடும் இல்லாத நிலையில் என்ன செய்யமுடியும்? பரந்து பொன் கொழிக்கும் கடலைப்போன்ற களனிகளைப் பாருங்கள். அங்கே அன்னியரின் நடமாட்டம் தெரிகிறது. ஆக்கத்தை அழிக்க துர்க்குறிகள் தெரிகின்றன. மன்னாரின் எண்ணெவளத்தைக் கண்டுபிடித்து தமதாக்க பகீரதப் பிரயத்தனம் நடக்கிறது. காங்கேசன்துறை சுண்ணக்கல் வளத்தை நாசமாக்கித் தண்ணீரைக் கடல்நீராக்க, யாழ்ப்பாணத்தைப் பாலையாக்க எத்தனையோ கெடுபிடிக்கள் நடக்கின்றன. நாட்டின் பொதுச்சொத்தான காட்டுவிலங்குகளை அழித்து தம்நாட்டைக் கட்டியமைக்கிறார்கள். எஞ்சியபூமியில் குடியேற சிங்களவரை ஆயுதக்காவலுடன் அனுப்பிவைக்கிறார்கள். இன்னும் எத்தனை வேண்டும்? தமிழர்களின் விளைவுகளை முடக்க. வெளிநாடுகளிலிருந்து அப்பொருட்களை இறக்குமதி செய்கின்றனர். மூளைவளத்தைக் குறைக்க 'தரப்படுத்துதல்' என்ற தரைப்படுத்தலை வெட்கமின்றிச் செயற்படுத்துகின்றனர். இந்நாட்டு மக்கள் இந்நாட்டு மக்கள் என்று சிங்களமக்களையே கூறாமல் கூறி உலகை ஏமாற்றி, தமிழரை தொழிற்றுறையில், வணிகத்துறையில், தொழில்நுட்பத்துறையில், கல்வித்துறையில் நொறுக்குகிறார்கள். இவற்றுக்காக பொய்பலகூறி வெளிநாட்டு உதவிகளைப் பெறுகிறார்கள். அந்நாடுகளும் நாம் கூறும் குறைகளை ஏற்றுக்கொள்ளாமல் உதவிகளை சிங்களவருக்கு வழங்குகிறார்கள்.

இங்கே இழந்தவற்றைக் கட்ட காலஞ்செல்லலாம்; அதற்காக அடிமையாக வாழத் தயாராகயில்லை. இன்றில்லையேல் நாளை ... என்றேனுமோர் நாள் விடுதலைபெற்றே வாழ்வோம். எமக்கில்லையென்றாலும் வருங்காலத்தலைமுறையினருக்காவது விடுதலை கிடைத்தேதீரும். இதற்காக இன்று செயற்படுவோம். இருப்பவை அனைத்தையும் ஒன்றுதிரட்டிப் போராடுவோம். அதுவே நம் வெற்றியாகும். அதுவே நம் தமிழீழத் தாயாகும். அதுவே நம் பொன்னார் பூமியாகும். வாழ்க தமிழீழம்! வெல்க அதன் போராட்டம்!

பொங்கும் தமிழீழம் பூத்த திருமகளை,
மங்க வைத்த முடுபனி மறைந்தோடப் போகிறது!
வங்கக் கடல் பொங்கும் வாழ்த் தொலி கேட்கிறது!
சங்குகள் மனை பொங்கத் தமிழ்ஆளப் போகிறது!

*** முற்றும் ***

*********************************************

தோழர்களே!

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் 'தமிழ் முரசு' தன் பங்களிப்பைச் சிறப்புறச் செய்ய 'தமிழ் முரசை' நெறிப்படுத்துங்கள்! எல்லாத் தொடர்புகளுக்கும் ......

THE EDITOR, "TAMOUL MOURASSOU", 8, RUE CHARLES MOUREU,
PARIS - 75013 (FRANCE)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாதி ஒழிப்பு
* * * * * * * * *

∴ குப்பிளான் சிவா ∴

ஆதிகாலத் தமிழர்கள் தொழிலை அடிப்படையாகக் கொண்டு சாதி என்னும் தொழுநோயை தமிழர்கள் மத்தியில் ஏற்படுத்தினர்கள். அது படிப்படியாக வியாபித்து தமிழ் மக்கள் மத்தியில் ஒரு கறையாக வளர்ந்து இப்போது தமிழ்மக்களைக் கூறுபோடும் அளவிற்கு தலைவிரித்தாடுகிறது. இது எந்த இனத்திலும் இல்லாத ஒரு கொடிய நோய். இது தமிழினத்தில் மட்டும் தலைவிரித்தாடுகின்றது. ஒளவையார் கூட "சாதி இரண்டொழிய வேறில்லை" என்று பாமரமக்களும் சுலபமாக புரிந்துகொள்ளக் கூடிய வகையில் யாடிவைத்தார். ஏன் பாரதியாரும் "சாதிகள் இல்லையடி பாப்பா" என்று அழகாகப் பாடியுள்ளார். இதை ஆதிகாலத்தில் வாழ்ந்த படிப்பறிவற்றவர்கள் அறியாது விடினும், நாகரீகம் வளர்ந்து படிப்பறிவுள்ள மனிதர் வாழும் இந்த 20 ஆம் நூற்றுண்டில் வாழ்பவர்களுக்குமா இது தெரியவில்லை

கீழ்சாதி என உயர்சாதியினுல் வர்ணிக்கப்படுபவனும் ஒரு தாயின் வயிற்றில் பத்து மாதம் இருந்துதான் பிறக்கிறுன். அதேபோல உயர்சாதி என தங்களைத் தாங்களே வர்ணித்துக் கொள்பவர்களும் தாயின் வயிற்றில் பத்துமாதம் இருந்துதான் பிறக்கிருர்கள். இருவர் உடலிலும் ஓடுவது செங்குருதிதான், என்ன வித்தியாசம் இருக்கிறது. இதை ஏன் இந்த மக்கள் புரிந்து கொள்ளவில்லை. சலவைத் தொழிலாளியை கீழ்சாதி என்கிருர்கள், சிகையலங்கரிப்பவனை கீழ்சாதி என்கிருர்கள் ஆனுல் அவன் அந்தத் தொழிலைச் செய்யாதுவிடின் உயர்சாதி என தம்பட்டம் அடிப்பவர்கள் சன்னியாசிக் கோலத்தில்த்தான் செல்லவேண்டி வரும். "செய்யும் தொழிலே தெய்வம்" என்பார்கள். அந்த மேன்மையான தொழிலைச் செய்பவனையா இப்படி ஒதுக்கி வைப்பது. இவர்களைக் கீழ்சாதி என வர்ணிப்பதோடு மட்டும் விட்டுவிட்டாறு? இல்லவே இல்லை.... ஆண்டவனைத் தரிசிப்பதற்குக்கூட தடை விதிக்கிறுன். கோவிலுக்குள் இவர்கள் செல்லக்கூடாதாம் ஏன்? ஆண்டவன் சொன்னுறு? இல்லவேயில்லை. இது உயர்சாதி என தம்பட்டமடிக்கும் படிப்பறிவற்ற முட்டாள்களின் கட்டளை. எந்தநாட்டிலும் எந்தச் சமயத்திலும் இல்லாத இந்த வேறுபாடு ஏன்? தமிழீழத்திற்கு அருகில் உள்ள சிறீலங்கா நாட்டில் கூட இந்த வேறுபாடு இல்லை. ஏன்? இந்து சமயத்தில், தமிழர் மத்தியில் ஏன்தான் இந்த வேறுபாடோ தெரியவில்லை. தற்போது பெரும்பான்மையான ஆலயங்கள் சகலருடைய வழிபாட்டிற்காகவும் திறக்கப்பட்டிருப்பினும், இன்னும்சில ஆலயங்களில் சகலரும் உட்செல்ல அனுமதிக்கப் படுவதில்லை. இதை யாரும் மறுக்க முடியாது. இந்த அவல நிலை பிறக்கும் தமிழீழத்தில் ஆவது மாறுமோ?

கிணறு தோண்டித் தண்ணீர் கிடைத்ததும் கிணறுதோண்டிய தொழிலாளி தண்ணீர் அள்ள அனுமதிக்கப்படுவதில்லை. அவன்அந்தக் கிணற்றுறத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோண்டாதுவிடின் எப்படித் தண்ணீர் கிடைக்கும்? இதை அறிவார்களா உயர்சாதி என வர்ணிக்கும் முட்டாள்கள்? வீடுகட்டும் தொழிலாளி வீடு கட்டிமுடிந்து புகுவிழா சென்றபின் வீட்டினுள்போக அனுமதிக்கப் படுவதில்லை. எந்த நாட்டில் இருக்கிறது இந்த அநியாயம். கேவலம் ஆறு அறிவுள்ள இந்த மனிதன் மிருகங்களே காட்டாத வேறுபாட்டைக் காட்டுகிறான். விவசாய வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த கூலிக்கு வேலைசெய்யும் தொழிலாளி வர்க்கத்தையும் கூறுபோட்டு சாதி என்னும் பட்டத்தை சூட்டுகிறார்கள். இன்னும் சில இடங்களில் இத் தொழிலாளருக்கு தேங்காய்ச் சிரட்டையில் தண்ணீர் கொடுப்பதை நாம் காணக்கூடியதாக உள்ளது. ஏன்? வேலைசெய்விப்பவன் தான் குடிக்கும் பாத்திரத்தில் நீர் கொடுத்தால் ஒட்டிவிடுமா? இதை ஏன் உயர்சாதி என தம்மைத் தாமே வர்ணித்துக்கொள்பவர்கள் அறியவில்லை. நகரசுத்தி செய்யும் தொழிலாள வர்க்கத்தையும் கீழ்சாதி என்கிறார்கள். அவன் அத்தொழிலை செய்யாதுவிடின் நகரமே சாக்கடையாக மாறிவிடுமென்பதை உயர்சாதி எனப் பறைசாற்றுபவர்கள் இன்னுமா அறியவில்லை. வரப்போகும் தமிழீழத்திலுமா மாறாது?

தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து சிறீலங்கா சிங்கள அரசிடமிருந்து எமது தாயகத்தை, தாயினும் மேலான தமிழீழத்தை மீட்கும் புனிதமான பணியில் ஈடுபட்டிருக்கும் இந்தக் காலகட்டத்திலுமா தமிழனைக் கூறுபோட்டுப் பார்ப்பது. தீண்டாமை ஒழிப்பு நடவடிக்கைகள் மூலம் முன்பு இருந்ததிலும் பார்க்க தற்போது ஓரளவு இந்தச் சாதிப்பாகுபாடு ஒழிக்கப்பட்டிருப்பினும் முற்றாக இந்நோய் தீரவில்லை. எனவே தமிழ் மக்கள் யாவரும் சுதந்திரப்போரில் ஈடுபடும் இந் நேரத்தில் வேற்றுமைகளைக் கைவிட்டு "ஒன்றே குலம்" என்ற தத்துவத்திற்கு இணங்க ஒன்றுபட்டு சாதி என்னும் கொடிய நோயை அகற்றி ஒற்றுமையாக நமது இறைமையை, இழந்த தாயகத்தை மீட்கும் பணியில் முன்னேறவேண்டும்.

ஒழிக சாதிப் பாகுபாடு !

வாழ்க தமிழர் ஒற்றுமை !

மலர்க விரைவில் தமிழீழம்!

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

"என் அயலவனைச் சிறை செய்தார்கள்;
நான் ஏன் என்று கேட்கவில்லை!
என் நண்பனைச் சிறை செய்தார்கள்;
நான் ஏன் என்று கேட்கவில்லை!
இறுதியில் என்னைச் சிறை செய்தார்கள்;
ஏன்என்று கேட்க யாருமே இருக்கவில்லை!"

— யாழ். பல்கலைக்கழக மாணவரவையின் துண்டறிக்கையில் உள்ள வரிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பான வாசகர்களே!

பிரதி வியாழக்கிழமையும், சனிக்கிழமையும் நாம், "செந்தமிழ் ஓசை" எனும் தீந்தமிழ் நிகழ்ச்சியை, F.M. 98.2 MHz இல், மாலை 8½ முதல் 9½ மணி வரை உங்களுக்கு வழங்கிகி-ன்றோம். எமக்கு இந் நிகழ்ச்சியை ஒலிபர-ப்ப ஆவன செய்வோர்

# Radio Soleil.

ஸ்தாபனத்தார்.

இல. 35, ரூ ஸ்டிபின்ஸன் - பரிஸ் 75018.
எமது பிரத்தியேக தொலைபேசி - (ஒலிபரப்பின் போது - மட்டும்) இலக்கம் 262-14-18.

"செந்தமிழோசை"யுடனே சேவை தொடர்புகட்கும்:

SENTAMILOSAI,
N° 8, RUE CHARLES MOUREU,
75013 - PARIS.
(Métro : TOLBIAC / PLACE D'ITALIE)

## யுகப் புரட்சி!

பார் முழுதும் வெறியாட்டம்
தமிழனுக்கோ ஊர் ஊராய்
தெரு நாய் ஓட்டம்
ஓர் பொழுதும் விடிவில்லை!
நாற்றிசையும் தமிழ் வானில்
இருளின் மூட்டம்!
தலை கொய்து நின் வாழ்வை
ஈழத்தே சிங்களவர்
தழலில் போடும்
நிலை கண்டும் இதுவரை
சாகாத வெறும் பேடி.
இங்கே நின்றேன்
கொலை வாளை ஏந்தாத
கோழைக்கே எழுதுகோல்
சொந்தம் போலும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

<u>விமர்சனம்</u>

[masthead lettering: தமிழ் முரசு]

முரசு:1 TAMOUL MOURASSOU ஒலி.1

எண்:
இல 5

[title lettering: எண்ணம்]

EELA TAMIL MANRAM

01-02-1983

1982 கார்த்திகை

கொழுந்து! கொழு உயிர்! விடுதலைத் தமிழ்க்கும்

"THE LANGUAGE IS THE IMMEDIATE ACTUALITY OF THOUGHT"
:- BY. MARX AND ENGELS

தமிழீழ விடுதலையை முன்னெடுத்துச் செல்வதற்காக மேற்கு ஜேர்மனியிலிருந்து வெளியிடப்படும் 'எண்ணம்' மாத இதழ் தனது சனவரி இதழில் (இதழ்-5) தமிழ் முரசில் தற்போது கையாளப்பட்டுவரும் தமிழ் மொழி, எழுத்து பிரயோகங்கள் குறித்து ஆய்வு விமர்சனம் ஒன்றினை வெளியிட்டுள்ளது. இதற்கு தமிழ் முரசின் சார்பில் 'எண்ணம்' ஆசிரியர் குழுவிற்கு எமது நன்றிகள். இவ்விமர்சனம் தமிழ் முரசின் அடுத்த இதழில் முழுமையாகப் பிரசுரிக்கப்படும்.

தமிழ் முரசின் ஏனைய வாசகர்களையும் இதுபற்றிய உங்கள் கருத்துக்களை தமிழ் முரசிற்கு அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறோம். தமிழ் முரசு தனது பங்களிப்பை சிறப்பாகச் செய்ய விமர்சனங்கள் இன்றியமையாதவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ✸ தமிழீழத்தின் தலைமகள்! ✸



திருமதி நிர்மலா நித்தியானந்தன்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் வெறும் வார்த்தைப் பங்களிப்பை விடுத்து தனது வாழ்க்கைப் பங்களிப்பையும் அளித்த தலை மகள். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஒவ்வொரு தமிழ்ப் பெண்ணும் பங்கு கொள்ள வேண்டிய அவசியத்தை.. அவசரத்தை.. உணரச் செய்து இன்று விடுதலைத் தீயை தமிழீழத்தில் பெரு நெருப்பாய் கொழுந்து விட்டு எரியச் செய்யும் இவர் சாதாரணமானவரல்ல. அமெரிக்கப் பல்கலைக்கழகமொன்றின் அரசியல் விஞ்ஞான (POLITICAL SCIENCE)ப் பட்டதாரி. தமிழ் நாடக உலகின் முக்கிய புள்ளி. மிகத் திறமை வாய்ந்த மொழிபெயர்ப்பாளர். பத்திரிகைத் துறையிலும் அனுபவம் மிக்கவர். இவரும் இவரது கணவரும் இன்று ஆக்கிரமிப்புச் சிங்கள அரசின் அடக்குமுறைகட்கும் கொடும் சித்திரவதைகட்கும் ஆளாகியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்ணாவிரதப் போராட்டம் தொடருகிறது




இது அகிம்சை என்றும் அறவழிப் போராட்டம் என்றும் மேடைகள் தோறும் வெட்டி முழங்குகின்ற கூட்டமல்ல. வேளை வருகின்ற போதெல்லாம் வெகுண்டெழுகின்ற கூட்டம். ஆக்கிரமிப்பு சிறீலங்கா அரசின் அநீதியை... அக்கிரமத்தையெல்லாம் அச்சமின்றி தட்டிக் கேட்கும் கூட்டம் ஆக்கிரமிப்பு அரசின் சித்திரவதையிலிருந்து சக மாணவன் விமலராசாவுக்கு விடுதலை வேண்டித் தந்த கூட்டம். இந்த யுகத்தின் புரட்சி மாணவரின் கையிலேயே என்பதை நிரூபிக்கும் கூட்டம்.

இன்று இவர்கள் - யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்ச்சியாக உண்ணாவிரதம் மேற்கொள்கிறார்கள். தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள மதகுருமார், அறிஞர்கள், மாணவர்கள் அனைவரையும் விடுதலை செய்யுமாறு கோருகிறார்கள் இவர்களது கோரிக்கையை கொழும்பு, கண்டி, களனி உட்பட இலங்கையின் சகல பல்கலைக்கழக மாணவர்களும் ஏற்று போராட்டத்துக்கு ஆதரவு வழங்குகிறார்கள்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் இந்த யுகப் புரட்சி வெற்றிபெற தமிழ் முரசும் தனது ஆதரவை நல்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




விரைவில் வெடித்துச் சிதறப்போகும் கடன் என்னும் வெடிகுண்டினால் முதலாளித்துவம் முதுகொடிந்து விழப்போகிறது. சர்வதேச வங்கிகள் சாவைத்தழுவப் போகின்றன. தவறான பொருளாதார வழிநடத்தல்களின் பரிசு என்ன தெரியுமா? இன்று உலகின் மொத்தக்கடன் தொகை 706 பில்லியன் தாலர்கள். உலகில் வாழும் ஒவ்வொருவரும் தலைக்கு 154 தாலர் கடனாளிகளாக உள்ளனர்.

இன்னும் எம் தமிழ்மக்களுக்கு சமவுடைமைப் பொருளாதாரத் தத்துவங்களை ... நடைமுறைகளை அறியத்தருவதில் தாமதமேற்படுத்துவோமாயின் அது எம்மினத்தின் விடுதலையை பலநூறு ஆண்டுகள் பின் தள்ளித் தமிழினத்தை நாசம் செய்ய வழி கோலும்!

வெளியீடு

**தமிழ் ஈழ விடுதலைப் பேரவை (பிரான்ஸ்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org